# அமைச்சர் குமாரசூரியர் மீண்டும் வடக்குக்கு வருகிறார்

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு


THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 144
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஆனி 21 ரபி. ஆகிர் 30 ஞாயிற்றுக்கிழமை [5-7-70]

அன்டன்
வாளிகள்
அளவுகள் 7" முதல் 14" வரை
மொத்தமாகவும், சில்லறையாகவும்
கிடைக்குமிடம்:-
கதிர் ஹாட்வெயர்ஸ்
11/ 1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 7130



பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.

## சுதந்திரக் கட்சிக் கிளைகள் நிறுவ

யாழ்ப்பாணம், ஞாயிறு

வடபகுதிக்கு பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயகா விஜயஞ் செய்யுமுன்னர் தொகுதிகள் தோறும் சுதந்திரக் கட்சிக் கிளைகளை நிறுவுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

இம்மாத இறுதியில் மீண்டும் யாழ்ப்பாணத்திற்கு வரும் தபால் தந்தி அமைச்சர் திரு செ. குமார சூரியர் வடபகுதியில் பலசுதந்திரக்கட்சிக் கிளைகளை திறந்து வைப்பார்,

யாழ்ப்பாணம், நல்லூர் காரைநகர் நீர்வேலி, அச்சுவேலி, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, பரந்தன் பருத்தித்துறை, கைதடி ஆகிய இடங்களில் கடந்த ஒருமாத காலத்திற்குள் கிளைகள் நிறுவப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட சுதந்திரக்கட்சி அமைப்பாளர் திரு எம், நடராசா தெரிவித்தார்,

இம்மாத இறுதிக்குள் வட பகுதியில் மேலும் 15 சுதந்திரக்கட்சிக் கிளைகள் நிறுவப்படுமென்றும் இம்மாத இறுதியில் இங்கு வரும் தபால் அமைச்சர் கிளைகளை திறந்து வைப்பாரென்றும் அவர் தெரிவித்தார்.

### விஸ்தரிக்கப்படும்

கோட்டை, வெள்ளி

கொழும்பு கோட்டை வத்தளை ஆகிய இடங்களிலும் சட்டவிரோதக் குடியேற்றம் கள்ளக்கடத்தல் ஆகியவைகளைத் தடுப்பதற்கு தடுப்பு நடவடிக்கைகளை விஸ்தரிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இப் பகுதிகளிலும் கள்ளக்கடத்தல் அதிகமாக நடைபெறுவதாகக் கூறப்படுவதைத் தொடர்ந்து அரசாங்கம் இந் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது,

# மாவை ஆலயக் கதவுகள் திறக்க பிரதமர் நடவடிக்கை

### அமைப்பாளராகத் தெரிவு

விஸ்வமடு, சனி

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கிளிநொச்சித் தொகுதிக் கிளை நிர்வாகசபைக் கூட்டத்தில் திரு. கே. தம்பிநாயகம் சுதந்திரக்கட்சி கிளிநொச்சித் தொகுதி அமைப்பாளராக நியமிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. திரு. தம்பிநாயகம் சுதந்திரக்கட்சி பரந்தன் கிளை உறுப்பினராவர்.

ஆட்சிமன்றத்தில்

## சுகததாஸ விவகாரம் இன்று பிரேரணை வருகிறது

கோட்டை, சனி

திரு வி ஏ சுகததாஸ தேசியமய சேவைகள் அமைச்சராக விருந்தபொழுது மேற்கொண்ட சில நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்கென தெரிவுக்குழு நிறுவப்படும்.

இதற்கான பிரேரணையொன்றை நாளைய தினம் மக்கள் பிரதிநிதிகள் சபையில் நீர்ப்பாசன, மின்சார அமைச்சர் திரு மைத்திரி பாலசேன நாயக்கா கொண்டு வருவார்.

திரு சுகததாஸ அமைச்சராக விருந்த பொழுது பதவியையும் செல்வாக்கையும் சுயநலங்களுக்கு பயன்படுத்தினரா அதிகாரத்தைதுஷ்பிரயோகம் செய்தாரா, சட்டத்துக்கும் ஒழுங்குக்கும் மாருக நடந்தாரா என்பவை பற்றி இந்த தெரிவுக் குழு ஆராயும்.

## சிறுபான்மை தமிழர் மகாசபை குழுவுக்கு ஸ்ரீமாவோ உறுதி

— நமது கொழும்பு நிருபர் எம் சின்னத்துரை —

மாவைக்கந்தன் ஆலயக் கதவுகளை சகலரது வழிபாட்டுக்கும் திறந்துவிடுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதாக நேற்றுத் தம்மைச் சந்தித்த அகிலஇலங்கை சிறுபான்மைத்தமிழர் மகாசபைக் குழுவிடம் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயகா உறுதியளித்தார்.

இம்மாதம் 8-ந் திகதிக்கு முன்னர் அட்டோர்னி ஜெனரலுடன் தொடர்பு கொண்டு இதுசம்பந்தமான நடவடிக்கையை மேற்கொள்வதாகவும் பிரதமர் அர்வகளிடம் தெரிவித்தார்.

நியமன எம். பி, திரு, எம் ஸி சப்பிரமணியத்தின் தலைமையில் மாவிட்டபுரம் [...] மதி ஸ்ரீமாவோ சென்றனர்.

சமூககுறைபாடு ஒழிப்புச் சட்டத்தில் தேவையான திருத்தங்கள் செய்யவேண்டிய அவசியம் குறித்தும் குழு பிரதமரை வற்புறுத்தியது, இந்த விஷயம் குறித்து ஆவனசெய்வதாக அவர்களிடம் பிரதமர் தெரிவித்தார்.

சிறுபான்மைத் தமிழ் பேசும் குழந்தைகளின் கல்விப் பிரச்னை குறித்தும் சிறுபான்மைத் தமிழர் மகாசபை பிரதமரின் கவனத்துக்கு சில விஷயங்களைக் கொண்டுவந்தது. இந்தப் பிரச்னையை ஆட்சிமன்றக் குழுவில் சமர்ப்பிக்கும்படி திரு எம். ஸியை பிரதமர் [...] டத்தை ஏற்படுத்திவருகிறார்கள் என்றும் தெரிவித்தது.

இந்தப் பிரச்னையையும் தன் கவனத்தில்கொண்டுள்ளதாக பிரதமர் கூறினர்.

திரு. எம். ஸி. சுப்பிரமணியம் தலைமையில்சென்ற குழுவில் அங்கம் வகித்தவர்கள்: எம். செல்லையா, எஸ் ஜே துரைசிங்கம், ஈ குணரத்தினம், சி. செல்லையா, கதிரவேலு, அருச்சுணன், திருநாவுக்கரசு, அன்ரனி.

## 112 பேர் பலி

[...]ன், ஜுலை 4

[...]யில் பிரிட்டிஷ் பிரயாணிகள் விமானம் [...]

மாவிட்டபுரம்

## ஆலயப்பிரவேசம் பற்றி 6-ந் திகதி ஒரு மகாநாடு

யாழ்ப்பாணம், ஞாயிறு

மாவிட்டபுரம் ஆலயப்பிரவேசம் சம்பந்தமான மகாநாடு ஒன்று இம் மாதம் 6ம் திகதி காலை காங்கேசன் துறை பட்டினசபை மண்டபத்தில் நடைபெற விருக்கிறது பட்டினசபைத் தலைவர் திரு. ஜெயபாலசிங்கத்தினல் கூட்டப்படும் இம் மகாநாட்டில் ஆலய தர்மகர்த்தா, சீனச்சார்புக் கம்யூனிஸ் கட்சிப் பிரமுகர்கள் எம் பிக்கள் உட்படப் பலர் அழைக்கப்பட்டுள்ளனர்.

ஆலயப்பிரவேசத்தை சுமுகமாக நடாத்த ஒத்துழைக்குமாறு சீனச்சார்பு [...]

திரு. ஜெயபாலசிங்கம் தெரிவித்தார்.

6ம் திகதி நடைபெறவிருக்கும் மகாநாட்டில், இவ்வருட உட்சவத்தை 1966ம் ஆண்டுக்கு முன்போல் நடாத்த ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டுமென்றும் உற்சவத்தின் பின் ஆலயத்தைத் திறந்துவிடுவதற்கான திகதி ஒன்றை தெரிவிப்பதாகவும் ஆலய தர்ம கர்த்தா தரப்பில் கோரப்படுமென கூறப்படுகிறது.

இம் மகாநாட்டில் தபால் தந்திப் போக்குவரத்து அமைச்சர் திரு ஸி. குமார சூரியர் கலந்து கொள்ளுவார் என எதிர்பார்க்கப் படுகிறதாம். அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்காக சில பிரமுகர்கள் கொழும்பு சென்றனர்,

## 500 தந்திகள் தபாலில் அனுப்பப்பட்டன!

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம், [...] வருகிறது.

அனுராதபுரம் பகுதி [...]

சுயபாஷைப்போதனை

## கஷ்டம் என்கின்றனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 500 தந்திகள் தபாலில் அனுப்பப்பட்டன!

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம், கொழும்புதந்தித்தொடர்புகள் செயல்படாததால், நேற்று சுமார் 500 தந்திகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டதாகதெரிய வருகிறது.

அனுராதபுரம் பகுதியில் சில தந்திக்கம்பி தொடர்புகள் செயல்படாத காரணமாகவே இந்நிலை ஏற்பட்டதாகவும் அறியப்படுகிறது.

# இந்தக் காணிகளை அரசாங்கம் எடுக்கும்

கோட்டை, சனி

விசேஷ குத்தகைத் திட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்டு பயன்படுத்தப்படாமலிருக்கும் காணிகளை அரசாங்கம் எடுக்கவிருக்கிறது. கடந்த அரசாங்கம் இந்தக் காணிகளை வழங்கியது. ஐந்தில் ஒருபங்கே பயிர்ச்செய்கைக்கு உபயோகிக்கப்பட்டுள்ளதாம்.

இந்தக்காணிகளை அரசாங்கம் சுவீகரித்து கூட்டுப்பண்ணைகளை நிறுவவுள்ளது; நிலமற்ற ஏழை மக்களுக்கும் இந்தக் காணிகளை வழங்கும்.

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, ஞாயிறு

நேற்று அதிர்ஷ்டம்பார்க்கப்பட்ட தேசிய லொத்தர் சபையின் சுவீப் சீட்டிழுப்பு முடிவுகள் வருமாறு:-

1-ம் பரிசு:

40 S 0630 ரூ. 1000,000

2-ம் பரிசு:

10 A 0455 ரூ. 40,000

3-ம் பரிசு:

11 S 0198 ரூ. 10,000

தலா 684 ரூபா 30 சதம் பெறும் 100 டிக்கட்டுகள் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| 27 A 0984 | 40 B 0659 |
| 03 B 0094 | 13 B 0750 |
| 16 B 0564 | 42 C 0576 |
| 05 C 0819 | 40 C 0182 |
| 12 C 0061 | 19 C 0862 |
| 02 D 0182 | 23 D 0674 |
| 30 E 0791 | 15 F 0914 |
| 36 F 0660 | 29 F 0034 |
| 18 F 0063 | 02 F 0495 |
| 13 F 0155 | 11 G 0130 |
| 37 G 0929 | 30 G 0314 |
| 08 H 0415 | 28 H 0476 |
| 20 H 0938 | 26 H 0345 |
| 30 H 0910 | 30 J 0199 |
| 32 J 0800 | 18 J 0162 |
| 36 J 0877 | 21 J 0484 |
| 35 K 0776 | 36 K 0566 |
| 20 K 0201 | 03 L 0285 |
| 13 L 0361 | 14 L 0889 |
| 22 L 0781 | 26 N 0603 |
| 14 N 0387 | 07 N 0438 |
| 17 N 0944 | 39 N 0410 |
| 28 N 0229 | 40 o 0372 |
| 35 o 0151 | 25 o 0714 |
| 17 O 0150 | 29 o 0207 |
| 23 P 0224 | 30 P 0317 |
| 03 P 0832 | 25 P 0169 |
| 19 P 0846 | 32 P 0494 |
| 36 P 0252 | 43 Q 0327 |
| 22 Q 0781 | 20 Q 0259 |
| 16 Q 0626 | 38 Q 0490 |
| 21 Q 0651 | 12 R 0902 |
| 41 R 0308 | 40 R 0945 |
| 35 R 0644 | 02 R 0657 |
| 08 R 0139 | 15 S 0643 |
| 29 S 0087 | 08 S 0462 |
| 41 S 0207 | 02 S 0320 |
| 10 S 0115 | 14 T 0255 |
| 06 T 0472 | 22 U 0080 |
| 42 U 0904 | 06 U 0939 |
| 24 U 0410 | 14 V 0698 |
| 25 V 0613 | 34 V 0696 |
| 15 V 0022 | 26 V 0715 |
| 37 V 0860 | 15 W 0892 |
| 13 W 0873 | 21 W 0371 |
| 24 X 0163 | 29 X 0087 |
| 03 X 0529 | 12 Y 0620 |
| 39 Y 0298 | 11 Y 0383 |
| 38 Y 0372 | 07 Y 0801 |
| 28 Z 0068 | 34 Z 0708 |

(இவை யாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்)

### வைத்தியபிரிவுக்கு 260 பேர்

கொழும்பு. வெள்ளி

இம்முறை பல்கலைக்கழகங்களுக்கு வைத்தியப்பிரிவுக்கு 260 மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதென கல்வி அமைச்சு முடிவுசெய்துள்ளது. 4 பாடங்களில் சித்தியடைந்தவர்களே தெரிவுசெய்யப்படுவர்.

425 மாணவர்கள் பொறியியல் பகுதிக்கு தேர்ந்தெடுப்பது என்றும் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

---

நடவடிக்கையை மேற்கொள்வதாகவும் பிரதமர் அர்வகளிடம் தெரிவித்தார்.

நியமன எம்.பி, திரு, எம் ஸி. சப்பிரமணியத்தின் தலைமையில் மாவிட்டபுரம் கந்தசுவாமிகோயில் ஆலயப் பிரவேசப் பிரச்னை குறித்து பிரதமரைச்சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

மாவை ஆலய உற்சவம் இம்மாதம் 8-ந் திகதி ஆரம்பமாகிறது. அதற்கு முற்பதாக அட்டோர்னி ஜெனரலுடன் இதுபற்றி தொடர்புகொண்டு, நடவடிக்கையைத் தாம் மேற்கொள்வதாக பிரதமர் திரு ... சபை பிரதமரின் கவனத்துக்கு சில விஷயங்களைக் கொண்டுவந்தது இந்தப் பிரச்னையை ஆட்சிமன்றக்குழுவில் சமர்ப்பிக்கும்படி திரு எம். ஸியை பிரதமர் கேட்டுக்கொண்டார்,

இளவாலை தேவாலயமொன்றில் சமீபத்தில் பொலிஸ் காவலுடன்நடந்த கலப்புத் திருமணம் ஒன்றையும் பிரதமருக்குச் சுட்டிக்காட்டியகுழு, இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து கள் இறக்கும் தொழிலாளர்களுக்கு இப்பகுதியில் மரம் கொடுக்காமலும், மற்றும் பல்வேறு விதத்திலும் கஷ்...

### 112 பேர் பலி

லண்டன், ஜுலை 4

ஸ்பெயினில் பிரிட்டிஷ் பிரயாணிகள் விமானம் ஒன்று கீழே விழுந்து நொறுங்கியது. இதில் இருந்த 112 பேரும் மாண்டு விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

---

கட்சிப் பிரமுகர்கள் எம் பிகள் உட்படப் பலர் அழைக்கப்பட்டுள்ளனர்.

ஆலயப் பிரவேசத்தை சுமுகமாக நடாத்த ஒத்துழைக்குமாறு சீனச்சார்பு கம்யூனிஸ்ட் பிரமுகர் சிலருடன் பேச்சுவார்த்தை நடத்திதாகவும், அவர்கள் சம்மதம் தெரிவித்துள்ளதாகவும்

---

சுயபாஷைப்போதனை

## கஷ்டம் என்கின்றனர் விரிவுரையாளர்கள்

கோட்டை, ஞாயிறு

வைத்தியம், பொறியியல் சட்டம் ஆகியதுறைகளில் சுயபாஷையில் போதனை நடாத்தமுடியாதென விரிவுரையாளர்கள் தெரிவித்துள்ளனர் இது சம்பந்தமாக விரிவுரையாளர்கள் கல்வி அமைச்சரைச் சந்தித்துப்

(4-ம் பக்கம் பார்க்க)

# மாவை ஆலயப் பிரவேசத்துக்கு ஒப்பந்தங்களால் பயனில்லையாம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

மாவிட்டபுரம் ஆலப்பிரவேசம் சம்பந்தமாக, உயர்தர அரசாங்க அதிகாரிகளுடனே, மந்திரிகளுடனே, செய்யும் ஒப்பந்தம் எவ்வித பலனையும் அளிக்காதென்பதை கடந்தகால சம்பவங்கள் நீருபித்துவிட்டன. சகல முற்போக்கு சக்திகளும் கருத்துவேறுபாடுகளின்றி ஐக்கியப்பட்டு போராடுவதினுல்தால் வெற்றிகாண முடியும் தனிப்பட்ட ஒரு கட்சியோ, குழுவோ ஸ்தாபனமோ, போராடி வெற்றி காணமுடியாது."

புரட்சிவாத சமசமாஜகட்சியின் யாழ். கிளை காரியதரிசி திரு. க. குமாரசாமி நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்

அந்தஅறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது. கடந்த 2 வருடத்திற்கு மேலாக போராட்டங்கள் நடைபெற்றும் மாவிட்டபுரத்தில் சிறுபான்மை சமூகத்தவரின் உரிமை நிலைநாட்டப்படவில்லை நமதுஉரிமையை யாரும் நன்கொடையாக வழங்கமாட்டார்கள். உரிமைபெற வேண்டுமானுல அதற்கு போராட வேண்டும். போராட தயாரானுல் அதனுல் வரும் பலன்களை நிரந்தரமாக அனுபவிக்கலாம்.

இப் போராட்டத்திற்கு வேறு பகுதிகளிலிருந்து ஆதரவு கிடைத்திருந்தாலும் இப்போராட்டம் சிறுபான்மைத் தமிழரின் சொந்தப் போராட்டமாக இருக்க வேண்டும். போராட்டம் நேரடி நடவடிக்கையாக இருக்க வேண்டும்,

மாவிட்டபுரம் வருடாந்த உற்சவ தினத்தன்றே போராட்டத்தை நடத்த வேண்டும். அன்றையதினம் வடபகுதியில உள்ள சிறுபான்மைத் தமிழர் இயக்கங்கள் எல்லாம் மாவிட்டபுரம் கோவில் வீதியில் ஒன்றுகூட வேண்டும், அணியணியாக ஆயிரக்கணக்கில் கோவில் கதவைநோக்கி செல்லவேண்டும். எல்லாரும் தங்களை ஆலயப்பிரவேசத்திற்குதயாராக்கிக் கொள்ளவேண்டும். சிறுபான்மைத் தமிழரின் உரிமையை நிலைநாட்ட இதுவே சிறந்த வழியாகும்.

வடபகுதியில் பாகுபாடு காட்டப்பட்டுவரும். தேநீர்கடை, சலவைத் தொழிற்சாலை, சிகை அலங்கரிப்பு நிலையம், ஆகியவற்றுக்குள்ளும் ஆயிரக்கணகிகுல் சிறுபான்மை தமிழர் திரண்டு அணியணியாக செல்லவேண்டும். காணியற்ற சிறுபான்மைத் தமிழர்கள் ஆயிரக்கணக்கில் ஒன்றுதிரண்டு, பயிர்ச்செய்கைக்குரிய காணிகளுக்குள் சென்று அதனை அதனை பயன்படுத்தவேண்டும்.

சகல சிறுபான்மைத் தமிழர் இயக்கங்களும், இதற்கு ஆதரவளிக்கும் அரசியல் கட்சிகளும் சேர்ந்து போராடினுல் நிச்சயம் வெற்றி கிடைக்கும்.

ஒப்பந்தம் பேச்சுவார்த்தை எல்லாம் பயனளிக்காது மாவிட்டபுரம் ஆலயப் பிரவேசம் சம்பந்தமாக 68-ம் ஆண்டு செய்யப்பட்ட ஒப்பந்தம் உற்சவம் முடிந்தபின்னர் நிறைவேற்றப்படவில்லை. ஒப்பந்தத்தை நம்பி சிறுபான்மைத் தமிழா ஏமாறக் கூடாது. ஐக்கிய போராட்டத்திற்கு தயாராக வேண்டும்.

## வெகுஜன இயக்கம் தயாராகின்றது

யாழ்ப்பாணம், ஞாயிறு

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவ தினத்தன்று, ஆலயப் பிரவேசம் செய்வதற்கான ஏற்பாடுகளைத் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் செய்துவருகிறது. வடபகுதியின் பல இடங்களிலிருந்து ஆலயப் பிரவேச இயக்கத்திற்கான உறுப்பினர்களைச் சேர்த்துவருகிறது.

ஆலயப்பிரவேச இயக்கத்தில் சுமார் 200 பெண்கள் கலந்துகொள்வார்கள் என்றும், திடீர்ப் பிரவேசம் நடத்துவதற்கான ஓர் இரகசியத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் இயக்க உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த இரகசியத் திட்டம் இம்மாதம் 8ந் தேதி காலையில்தான் உறுப்பினர்களுக்கு வெளியிடப்படும் என்றும், ஒப்பந்தங்கள், பேச்சுவார்த்தைகள் எதுவும் பயனளிக்காது என்றும் அவர் தெரிவித்தார்.

காங்கேசன்துறை, சங்கானை, சாவகச்சேரி, கரவெட்டி மற்றும் பல பகுதிகளில் உறுப்பினர்கள் இந்த இயக்கத்தில் சேர்ந்துள்ளதாகவும் அவர் கூறினர்.

---

வடபகுதியில்

## 15,000 ஏக்கர் நிலத்தில் உப - உணவு உற்பத்தி

யாழ்ப்பாணம், ஞாயிறு

வடபகுதியில் உப உணவு உற்பத்தியை பெருக்குவதற்காக கல்லுண்டாய்ப் பகுதியில் சுமார் 15,000 ஏக்கர் நிலததில் ஆரம்பிக்கப்பட்ட நீர்ப்பாசன வேலைகள் முடிவடைந்து விட்டன. இத்திட்டத்தின்கீழ் வடபகுதி விவசாயிகள் பயனடைவார்கள்.

வழுக்கைஆற்றுப் பள்ளத்தாக்கு எனக் கூறப்படும் இப் பகுதியின் மேற்குப் பக்கத்தில் பண்டத்தரிப்பு பிராந்தியமும் தெற்கில் கடலும் கிழக்கில் காங்கேசன் துறைப்பிரிவும் வடக்கில் தெல்லிப்பழைப் பிரிவும் எல்லைகளாக இருக்கின்றன,

பல பொது ஸ்தாபனங்களின் நீண்ட நாள் கோரிக்கை கடந்த அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு நீர்ப்பாசன வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இப்பகுதியில் பல்வேறுஉப உணவுகளையும் தோட்டப் பயிர்களையும் உற்பத்தி செய்வதற்கு அரசாங்கத்தின் ஒத்துழைப்பு விவசாயிகளுக்குகிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.(கு வி ம)

### இன்று பதவிப்பிரமாணம்

கோட்டை, ஞாயிறு

கட்டானைத் தொகுதியின் புதிய எம் பி யாகத்தெரிவு செய்யப்பட்டுள்ள திரு சே சி டி சில்வா இன்று பி ப 2 மணிக்குச் சனப்பிரதிநிதிகள் சபை கூடும்போது பதவிப்பிரமாணம் செய்துகொள்வார்

## ரயிலுக்கு இருவர் பலி

கோட்டை, சனி

ரயிலினுல் மோதுண்டு இருவர் மாண்டனர். எலகவத்தையைச் சேர்ந்த டொன் ஹெமச்சந்திரா (19), புதுவருமவைச் சேர்ந்த டபிள்யு டொன் ஸ்சபெல்லா ஹமி (78) ஆகியோரே இவ்விபத்தில் மாண்டவர்கள்.

### புதிய அரசாங்க அதிபர்கள்

கோட்டை, ஞாயிறு

இலங்கையின் பல்வேறு மாவட்டங்களிலும் பொது நிர்வாக உள்ளூராட்சி உள்நாட்டு நிர்வாக அமைச்சினுல் புதிய அரசாங்க அதிபர்கள் நியமிக்கம்பட்டுள்ளனர். விபரம் பின்வருமாறு:

கொழும்பு திரு. டங்கன் டி. அல்விஸ், கண்டி திரு. எஸ் மரலானதே அனுராதபுரம் திரு. ஏ பி. பி. மனம்பெரி, கேகாலை திரு. கே எச். ஜே. விஜேதாச, காலி திரு. விக்டர் உனந்தென்ன, அம்பாறை திரு பிரட்மன் வீரக்கோன், மொவருகலை திரு. டபிள்யு ஜே, பெர்னுண்டே, பதுளை திரு பி எஸ் விஜேவீர, புத்தளம் திரு பி புஞ்சிகேவா

## தமிழரசு கூடுகிறது

கொழும்பு, ஞாயிறு

தமிழரசுக்கட்சியின் ஆட்சி மன்றக்குழு இன்று காலை கொழும்பிலுள்ள திரு. எஸ் ஜே. வி. செல்வநாயகம் எம். பி. இல்லத்தில் கூடி இன்றைய அரசியல்நிலை குறித்து ஆராயும்.

## இன்று

கோட்டை மூனீஸ்வரன் கோவில் விசேட ஸ்நாபனுபிஷேக விழாவின் இரண்டாவது தினமாகிய இன்று பூஜை ஆராதனைகளுக்குப்பின் திரு மு வர்ணகுலசிங்கம் 'அருளாளர்' என்னும் பொருள்பற்றி கதரப்பிரசங்கம் செய்வார்.

## வாத்தக கருத்தரங்கு கண்டியில்

உடுவில், சனி

வர்த்தக ஆசிரியர்களின் விடுமுறைகால பயிற்சிவகுப்புக் கருத்தரங்கு இவ் வருடம் கண்டியில் நடைபெறும், பிரதம கல்வி ஆலோசகர் (வர்த்தகம்) திரு சீ. ஏ. எம். கெக்குலாவல நேற்று நடைபெற்ற தமிழ் வர்த்தக ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் இத்தகவலை வெளியிட்டார்.

சென்றமுறை கொழும்பு மகரகம ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நடைபெற்ற இக் கருத்தரங்கு இம்முறை சிங்களஆசிரியர்களுக்கு தனியாகவும் தமிழ் ஆசிரியர்களுக்கு தனியாகவும் நடைபெற ஒழுங்குகள் செய்யப்படுவதாகவும் ஆவணி மாத விடுமுறையில் இவை நடைபெறுமெனவும் அவர் தெரிவித்தார்

# தனியார்துறை ஊழியருககு பாதுகாப்பு; உறுதிப்பாடு!

### தொழில் அமைச்சர் சமர்ப்பித்த அறிக்கை

கோட்டை, ஞாயிறு

தொழிலாளர் சாசனமொன்றை உருவாக்குவதற்கான அறிககையொன்றை தொழிலமைச்சர் திரு. எம் பி. டி. சற் சிறிவர்த்தன மந்திரி சபையிடம் நேற்று சமர்ப்பித்தார். தனியார்துறை ஊழியர்களுக்கு பாதுகாப்பையும், உறுதிப்பாட்டையும் அளிக்கக்கூடிய முறையில் இந்த சாசனம் அமையும்.

கூட்டணி அரசின் சிம்மாசனப் பிரசங்கத்தில் இதுசம்பந்தமாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தொழிலாளர்களின் அவசிய அலுவல்கள் சம்பந்தமாக கவனிக்க மூன்று நிரந்தரக் காரியதரிசிகள் கொண்ட கமிட்டியொன்றையும் தொழில் அமைச்சர் நியமிக்கவுள்ளார்.

## சிதம்பராவுக்கு முதல் பரிசு

வல்வெட்டித்துறை, சனி

வல்வை சிதம்பரக் கல்லூரி சாரணர் குழு அகில இலங்கையிலும் முதல் இடத்தை பெற்றமைக்காக மகா தேசாதிபதி திரு. வில்லியம் கோபல்லவா இம்மாதம் 28-ம் திகதி சேர். அன்ரு-கால்டிக் கொற் வெற்றிக் கிண்ணத்தை பரிசாக வழங்குவார். கடந்த வருடமும் இவ் வெற்றிக் கிண்ணத்தை இவர்களே பெற்றுக் கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### சட்ட ஆலோசகர்

கோட்டை, சனி

நிதி அமைச்சின் சட்ட ஆலோசகராக திரு. மெல்வின் டி. எஸ். பொரவஸ்ஸா நியமிக்கப்பட்டுள்ளார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

திறமைவாய்ந்த பெண் கன்வெஸர்கள் தேவை. திறமைக்கேற்ப கமிஷன் வழங்கப்படும். நேரில் விண்ணப்பிக்கவும் மனேஜர், M. S. T. (சங்கரப்பிள்ளை கட்டிடம்), 95/3, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம். 3148

முகாமையாளர்:

வவுனியா மாவட்டத்தில் இருக்கும் விவசாய பண்ணைக்கு முகாமையாளர் தேவை. விவசாயத்திலும் நிர்வாகத்திலும் போதிய பயிற்சி அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். அரசினர் சேவையிலிருந்து இளைப்பாறியவர் விரும்பத்தக்கது. தகுதிக்கேற்ற சம்பளம் நேரில் பேசிக் கொள்ளலாம். விளம்பர இல: 3152, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம், 3152

### விற்பனைக்கு

எழுதுமட்டுவாளுக்கும், பளைக்குமிடையே உள்ள 236 ஏக்கர் தென்னந்தோட்டக் காணி சில பகுதி தென்னையுடையது- (முடிக்குரிய உறுதி) மூன்று துண்டுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இராசரத்தினம் பிரக்டர், 60, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம். 3151

நெல்வயல் 15 ஏக்கர். பூநகரி, நல்லூரை அடுத்த தியாகம என்னும் கமம். நியாயமான விலைக்கு விற்கப்படும். விபரங்களுக்கு சு. தர்மலிங்கம், இல. 81, மாக்கற், பெரியகடை, யாழ்ப்பாணம். 2165

### சி. பா, த. மகாசபைக்கு காரியாலயம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

அகில இலங்கைச்சிறுபான்மைத் தமிழர் மகாசபைக்கு ஒரு காரியாலயம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. பலாலிவீதியில் அமைந்துள்ள இக்காரியாலயத்தை மகாசபைத் தலைவரும் நியமன எம்.பியுமான திரு. எம். ஸி சுப்பிரமணியம் திறந்து வைத்தார்.

## இடமாற்ற அறிவித்தல்

அன்பர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் 181, கோவில் வீதி, நல்லூர் (அ. வ கேற் சண்முகநாதன் வீட்டிற்கு அருகில்) இடம்மாறியுள்ளேன் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

A. S. இராமநாதன்,
மிருதங்க வித்துவான்.

2342

## ஏல விற்பனை

(1) றலி துவிச்சக்கர வண்டி 1.
(2) யந்திர தெளிகருவி 1.
(3) யந்திர தூவு கருவி 1.

இடம்: கிளி. மேற்கு ப. நோ கூ. சங்கம், கிளிநொச்சி.
நேரம்: 10 மணி.
திகதி: 15-7-70;

தலைவர்.

2337

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### ஞாயிறு 5—7—70

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-15, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-35 மெல்லிசை, 7-30 திரைகானம், 8-00 நிலையஒலிப் பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திரகானம் 1-00 மாதர் கேட்டவை,

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்விஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 இளைஞர் கண்டுபிடிப்புகள்

இரவு 6-00 பாமாலை, 6-30 கிராமசஞ்சிகை, 7-15 வீணை, 7-45 பேச்சு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 கலைக்கோலம் 10-00 நேயர் கேட்டவை, 10-30 செய்தித்தொகுப்பு.


### ராஜா - யாழ்ப்பாணம்

தினசரி 3 காட்சிகள் பிரிபோயா, போயா 4 காட்சிகள்

காந்தராவ், ராஜ்ஸ்ரீ, ஜெயந்தி

நடித்த

# மாவீரன் ஜெயசீலன்


## கேள்விவிளம்பரம்

### நாவற்குழி கிராமசபை

1970-ம் ஆண்டு யூலைமாதம் 17-ந்திகதி காலை 10-00 மணி வரை நாவற்குழி கிராமசபைத் தலைவரால் (1) மறவன்புலவு மணற்காடு பாடசாலை வீதி திருத்தவேலை (2) நாவற்குழி கைதடி வைத்தியசாலை வீதி திருத்தவேலை ஆகிய அரசநன்கொடை வேலைகளுக்கு சீல் வைத்த கேள்விகள் பதிவுசெய்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விகள்யாவும் பதிவுத்தபால் மூலம் கிராமசபைத் தலைவருக்கு அனுப்பப்படுதல் வேண்டும். அதே நேரத்தில் கேள்வியின் நகல் பிரதியொன்று பதிவுத்தபால் மூலம் யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கும் அனுப்பப்படுதல் வேண்டும். கேள்வியையும் நகல்பிரதியையும் கொண்ட கடித உறைகளின் இடது பக்கமேல்மூலையில்வேலையின் பெயர் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு வேலைக்கும் கேள்விப் பத்திரப்பணம் ரூபா 25/-ம் கேள்விப்பிணைப் பணம் ரூபா 50/-ம் கட்டிய தன் பேரில் கிராமசபைத் தலைவரால் 15-7-70 நண்பகல் 12-00 மணி வரைவழங்கப்படும் உத்தியோகபூர்வமான பத்திரத்திலேயே கேள்விகள் அனுப்பப்படுதல் வேண்டும். கேள்விப்பத்திரப்பணம் திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது.

மேலதிகவிபரங்களை எமது அலுவலகத்திலும், யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அலுவலகத்திலும் அறிந்து கொள்ளலாம்.

சோ சடாட்சரம்.
அக்கிராசனர்
கிராமசபை, நாவற்குழி.

நாவற்குழி,
கைதடி, 2-7-70 2344

## கேள்வி விளம்பரம்

### முசலி வடக்கு கிராமசபை அரிப்பு

20-7-70-ம் திகதிவரை 'பி. பி. பொற்கேணி ஆயுள்வேத வைத்தியசாலைக் கட்டிடத்திற்கான' கேள்விகள் முசலி வடக்கு கி. ச. தலைவர் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும். உத்தியோகபூர்வமான கேள்விப் பத்திரத்தின் கிரயம் ரூபா 10-00, கேள்விப் பிணைப் பணம் ரூபா 100-00. கேள்விப் பத்திரங்கள் 19-7-70 பகல் 1-30 மணிவரை விநியோகிக்கப்படும். இதன்

## ORDER NISI IN THE DISTRICT COURT OF JAFFNA

No. Testy 2597

In the matter of the Last Willand Testament of the late Sultan Mohideen Mohamed Meeran Sahib of Moor Street, Jaffna.

Deceased.

Sultan Mohideen Kachchu Mohamed of No. 27, Kamal Lane, Vannarponnai West, Jaffna.

Petitioner

vs

1. Suhootha Ummah widow of Sultan Mohideen Mohamed Meeran Sahib of No. 4, M O. Lane, Vannarponnai West, Jaffna.
2. Pathumuthu, widow of S. M. Mohamed Meeran Sahib of No. 117, Manipay Road, Vannarponnai West, Jaffna.

Minors

3. Meeran Sahib Jafeer of 117, Manipay Road, Vannarponnai W, Jaffna
4. Meeran Sahib Subair of 117, Manipay Road, Vannarponnai W, Jaffna
5. Kabeeba daughter of Meeran Sahib of 117, Manipay. Road, Vannarponnai W. Jaffna
6. Meeran Sahib Lafeer of 117, Manipay Road, Vannarponnai W, Jaffna
7. Jazeeka daughter of Meeran Sahib of 117, Manipay Road, Vannarponnai W. Jaffna.

Respondents.

This matter coming on for disposal before I. M. Ismail, Esquire, District Judge, Jaffna on the 30th day of April, 1970 in the presence of Mr C. C. Somasegaram, Proctor on the part of the petitioner and the affidavit of the Petitioner dated 26th April, 1970 and the affidavit of the five witnesses dated 6th March, 1970 having been read.

It is Ordered that the 2nd Respondent be and she is hereby appointed as Guardian-ad-litem over the minors the 3rd to 7th Respondents above named for the purpose of watching their interest in these proceedings.

It is further Ordered that the Last Will of the above named deceased dated 11th

# தமிழ்ப் பகுதி

# பாடசாலை சிறு ஊழியருக்கு சிங்கள தேர்ச்சி அவசியமில்லையாம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

தமிழ்ப்பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் சிறு ஊழியர்கள் உத்தியோக மொழியில்தேர்ச்சி பெறவேண்டிய அவசியமில்லை என தம்மைச்சந்தித்துப்பேசிய தேசிய ஆசிரியர் சங்கத் தூதுக்குழுவிடம் கல்விஅமைச்சர் ஜனாப்பதியுதீன் மஹ்முத் தெரிவித்தார்.

ஆசிரிய சேவையில் சேர்ந்த பின்னர் பட்டதாரியானவர்களுக்கு கடந்த 67-ம் ஆண்டிலிருந்து நிறுததப்பட்டிருந்த பட்டதாரிகளுக்குரியவேதனத்தைமீண்டும் வழங்குவதற்கும் தூதுக்குழுவிடம்அமைச்சர் இணக்கம் தெரிவித்தார்.

தேசிய ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. எல். எம். பெரேரா, காரியதரிசி திரு, இ. சிவநேசன் மற்றும் திருவாளர்கள் சு. மகேசன், எட்வார்ட்வீரசேகரா, வி. சிவசுப்பிரமணியம், ஆகியோர் தூதுக்குழுவில் இடம்பெற்றனர். பேச்சுவார்த்தையின் போது கல்வி மாஅதிபதி டாக்டர் பி. உடகம, வித்தியாதிபதி திரு. யூ டி ஐ. சிறிசேன ஆகியோரும் பிரசன்னமாயிருந்தனர். கடந்த ஐந்து ஆண்டுகளின் பின் கல்வி அமைச்சரை இச்சங்கம் சந்தித்தது.

தூதுக்குழுவின் கோரிக்கைகள் பலவற்றுக்கும் அமைச்சர் சம்மதம் தெரிவித்தார்.

சேவையிலுள்ள ஆசிரியர்கள் பட்டதாரிப் பரீட்சைக்குத் தோற்றும்போது வழங்கப்பட்டுள்ளசமயோசிதலீவிலிருந்து பரீட்சைக் காலத்திற்கு தொடர்ச்சியாக லீவு எடுப்பதற்கு அனுமதி வழங்கவும், தேசிய கல்விக்குழுவின் சிபார்சுப்படி மாவட்ட ஆசிரிய சேவையே சிறந்ததென்ற சங்க கருத்தையே தாம் கொண்டுள்ளதாகவும் வேண்டிய இடமாற்றங்களைச்செய்வதற்கு ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் திட்டம் வகுத்துக்கொடுக்க வேண்டுமெனவும் ... இது ... சங்கங்களுக்கே மிகுந்த பொறுப்பு உண்...

அண்மையில் நடைபெற்ற பதவி உயர்வுகள் சம்பந்தமாக ஆராயப்பட இருப்பதாகவும் மாணவ ஆசிரிய சேவையில்தமக்குநம்பிக்கை இல்லையெனவும் புதிய ஆசிரியர்கள் நியமிக்கப்படும் போது இச்சேவையிலுள்ள பட்டதாரிகள் நிலை சீர்செய்யப்படுமெனவும் வரைதல் ஆசிரியர்களுக்கு கொடுக்கப்படாதுள்ளபடி ஏற்றங்கள் சீர்செய்யப்படுமெனவும் குழுவிடம் அமைச்சர் தெரிவித்தார்.

ஆசிரியர்கள் பல்வேறு சங்கங்களாக இயங்காது ஒரே சங்கமாக ஒன்றுபட்டு இயங்கினால் ஆசிரியர் நிலையை மேம்படுத்த முடியுமென அமைச்சர் வலியுறுத்தினார்.

ஆசிரியர்கள் 55 வயதில் ஓய்வு பெறுவது பற்றியும் தூதுக்குழு அமைச்சருடன் பேசியது. (இதுபற்றிபொது நிர்வாக அமைச்சு உயர் அதிகாரிகளுடன் குழுபேசிய தன் முடிவு நேற்றைய 'ஈழநாடு' இதழில் வெளியாகியிருந்தது.)

சினிமா விமர்சனம்

## ஓடும் நதி

தந்தையின் மனதை மாற்றி தனது காதலியை திருமணம் செய்வதற்காக அடக்கமான குணமுள்ள பெண்ணை, அடங்காப்பிடாரியாக நடிக்கும் படி தனது வீட்டிற்கு கூட்டிச் செல்கிறார் ஒருவாலிபர். தந்தையோ, அப்பெண்ணையே தன் மருமகளாக ஏற்றுக்கொள்ளவிரும்புகிறார். வேறுவழியின்றி தந்தையுடன் கோபித்துக் கொண்டு வீட்டைவிட்டு வெளியேறி காதலியிடம் செல்கிறார் அந்த வாலிபர். தந்தையின் சம்மதமின்றி திருமணம் நடந்தால் சொத்து வராது எனக் கூறி திருமணம் செய்ய மறுத்து விடுகிறாள் காதலி. இந்த நிலையில் வாலிபன் துடிதுடிக்கிறான். தந்தையோ தன் மருமகளையே திருமணம் செய்ய முடிவு செய்கிறார். கடைசி வரை முடிவு தெரியாமல் விறுவிறுப்பாக செல்லும் குடும்பச் சித்திரம் தான் 'ஓடும்நதி'

தந்தையாக வரும் குணசித்திர நடிகர் பாலையா, நீண்டகால இடைவெளிக்குப்பின் மிக அற்புதமாக நடித்திருக்கிறார். சில கட்டங்களில் முகபாவங்களின் மூலமே, தமது நடிப்பை வெளிக்காட்டுகிறார். மகனாக வரும் ரவிச்சந்திரன்

மாக நடிக்கிறார். காட்சிக்கு காட்சி விதவிதமான உடையுடன் தோன்றி ரவிச்சந்திரனுக்கு ஈடுகொடுத்து நடிக்கிறார். செல்வந்தர் குடும்பத்தில் பிறந்து விதியின் காரணமாக ஏழை நிலையடைந்த பெண்ணாக வருகிறார் சரோஜாதேவி. கடைசி வரை சோக மயமாகவே காணப்படுகிறார். பழைய நடிப்பை காணமுடியவில்லை. தன் சிற்றன்னையின் பிள்ளைகளுக்காக வாழ்நாள் முழுவதும் கஷ்டப்படுகிறார். நாகேஷின் நகைச்சுவைகள் கருத்துள்ளவை. சில இடங்களில் அலுப்புத் தட்டுகிறது.

தாதா மிராசியின் டைரக்ஷனில் தயாராகியுள்ள இப்படத்தின் சில பாடல்கள் சில நினைவில் நிற்கிறது. சுசிலா - சௌந்தரராஜன் பின்னணி பாடியிருக்கிறார்கள். குடும்பசகிதம் பார்த்து மகிழவேண்டிய 'ஓடும் நதி' தற்பொழுது யாழ். வின்சர் தியேட்டரில் காட்சியளிக்கிறது. —'யோகி'

## நியமனம்

கோட்டை, சனி

நீர்கொழும்பைச் சேர்ந்த திரு. டொன்டேவிட் உள்ளூராட்சிச் சேவைக் கொமிசன் தலைவராக நியமிக்கப்

## புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கிளிநொச்சி தமிழாசிரியர் சங்க உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு ஆர் ரீ சுப்பிரமணியம், உபதலைவர்கள்: திரு வீ ஏ பிலிப்ஸ், திரு ஏ கே ராஜேந்திரம், திரு ஏ செல்லையா, செயலாளர்: திரு நா சோதிநாதன், துணைச்செயலாளர்: திருமதி மனோரஞ்சிதம் சுப்பையா, பொருளாளர்: திரு. அ. தில்லைநாதன், நிர்வாகசபை உறுப்பினர்கள்: திருமதி பரமேஸ்வரி இராசரத்தினம், திரு அ சிவலிங்கம், கணக்குப் பரிசோதகர்: திரு கே இராசரத்தினம்.

(கு. வி. ம.)

0 0 0

சுழிபுரம், சனி

வலிகாமம் மேற்கு கயரோக நிவாரண தேசிய சங்கத்தின் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: முதலியார் வி மகேசன் ஜே பி., தலைவர்: டாக்டர் ரி கெங்காதரன், உபதலைவர்கள்: திரு சி பி பவினிக், டாக்டர் சி பென்வலட், டாக்டர் என் சற்குணராசா, என். பி. சிவபாதம், செயலாளர்: திரு. உ ந தேவகடாச்சம், தனதிகாரி: பேளி அத்தனாசியார். நிர்வாகசபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

0 0 0

வேலணை, சனி

ஊர்காவற்றுறை தொகுதி ஆசிரியர் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் வேலணை சரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது. நெடுந்தீவு உட்பட தீவுப்பகுதியின் 67 பாடசாலைகளிலுமிருந்து 300 ஆசிரியர்கள் வந்திருந்தனர். சங்க நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு கு. வி. செல்லத்துரை, உபதலைவர் திரு. ஆர். யோசெப், செயலாளர்:

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

காந்தராவ், ராஜஸ்ரீ, ஜெயந்தி
நடித்த
# மாவீரன் ஜெயசீலன்
(சண்டைகள் நிறைந்த ஒப்பற்ற திரை ஓவியம்)

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
ஜெமினி — சௌகார்ஜானகி
நாகேஷ்—ஜெயந்தி
நடித்த
## இரு கோடுகள்

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன் - சரோஜாதேவி
நாகேஷ், பாலையா
நடித்த
## ஓடும் நதி

இப்பொழுது திரையிடப்படுகிறது
## வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா காலை 10-30)
எம்.ஜி.ஆர். ஜெயலலிதா
நாகேஷ் ரெங்கராவ்
மற்றும் பலர் நடித்த




பத்திரத்தின் கிரயம் ரூபா 10-00, கேள்விப் பிணைப் பணம் ரூபா 100-00. கேள்விப் பத்திரங்கள் 19-7-70 பகல் 1-30 மணிவரை விநியோகிக்கப்படும். இதன் பிரதி மன்னார்ப்பகுதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அவர்கட்கு அதேநேரத்திலும் அதே தேதியிலும் அனுப்பப்பட வேண்டும். மேல் விபரங்கள் முசலி வடக்கு கி. ச அலுவலகத்திலும் மன்னார்ப்பகுதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கந்தோரிலும் அறிந்து கொள்ளலாம்,

மு: மீராசாகிபு
தலைவர்
முசலி வடக்கு
கிராமசபை
அரிப்பு
1-7-70 2345

## இலங்கை ஐரோப்பிய உல்லாசப் பிரயாணிகள்

கோட்டை, சனி

ஐரோப்பிய உல்லாசப் பிரயாணிகள் கோஷ்டியொன்று இன்று இலங்கை வந்துள்ளது.

சுவிட்சிலாந்து பிரயாணிகள் நிலையமொன்றின் ஏற்பாட்டில் இங்கு வந்துள்ள இக்கோஷ்டியில் 130 பேர் உள்ளனர். இவர்கள் இங்கு இருவாரங்கள் தங்குவர்கள்.

ஒக்டோபர் மாதத்துக்கு முன்னர் மேலும் பத்து வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் கோஷ்டிகள் இலங்கைக்கு விஜயஞ்செய்யவுள்ளனவென்று உல்லாசப் பிரயாணிகள் சபை அதிபர் திரு. லியனகே தெரிவித்துள்ளார்.

## வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30,10-00
பிரிபோயா,போயா 2-30மணி
எம்.ஜி.ஆர்.-ஜெயலலிதா
நடித்த
சந்திரோதயம்

## ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30,9-30மணி
போயா, பிரிபோயா
2-30 மணி
நான் வளர்த்ததங்கை

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7-00 & 9-45 p m.
Poya-Prepoya 10-30 a.m.
A Charles H. Schneer
Production
THE VALLEY OF
GWANGI
(Techni Color)

[...] above named for the purpose of watching their interest in these proceedings.

It is further Ordered that the Last Will of the above named deceased dated 11th December, 1968 and now deposited in this Court be and the same is hereby declared proved and that the above named Petitioner as the Executor named in the said will be and he is hereby declared entitled to obtain Probate there of and that Probate be issued to him accordingly unless the Respondents or any other person or persons interested in the subject matter of this application shall on or before the 21st day of July, 1970 at 10 a. m. or soon thereafter show sufficient cause to the satisfacation of this Court to the contrary.

It is further ordered that the said minors be produced in Court on the said date.

This 30th day of April, 1970

Sgd/- I. M. Ismail.
District Judge, Jaffna.
Drawn by
Sgd/- C. C. Somasegaram,
Proctor for Petitioner
2348

## தாச்சிப் போட்டியில் சாம்பியன்

வேலணை, சனி

வேலணை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தினரால் நடத்தப்பட்ட தாச்சிச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டமும் பரிசளிப்பு விழாவும் வேலணை பழைய பஸ் நிலையத்துக்கு அருகாமையில் நடைபெற்றது. திருமதி அன்னம் வாதவூரின் ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்திற்கான இறுதி தாச்சிப் போட்டியில் வேலணை செட்டிபுலம் சனசமூக நிலையத்தினரும் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினரும் பங்குபற்றினர்செட்டி புலம் சனசமூக நிலையம் வெற்றியீட்டியதையடுத்து வெற்றிக் கேடயத்தை சுவீகரித்துக்கொண்டது.

பரிசிலை திரு.வா அருணகிரி வழங்கினர்.

REGAL JAFFNA
Daily 4-45, 7 & 9-45 P.M.
Tony Curins, Henry Fonda
in
THE BOSTON
STRANGLER
(Colour)

கலைச்செய்வதற்கு ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் திட்டம் வகுத்துக்கொடுக்க வேண்டுமெனவும் இது பற்றிச் சங்கங்களுக்கே மிகுந்த பொறுப்பு உண்டென்றும் தாம் இத்திட்டத்தை அமுல் செய்ய உதவுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

கல்வி நிர்வாக விடயத்தில் ஆசிரிய சங்கங்களின் ஆலோசனைகள் ஏற்றுக்கொள்ளப் படுமெனவும், சுற்றறிக்கைகள் சங்கத்துக்கு அனுப்பப் படுமெனவும் மாதாந்தம் கல்விப்பகுதி தமிழிலும் சிங்களத்திலும் வெளியிட இருக்கும் வெளியீடு சகல அறிவித்தல்களையுடையதாயிருக்குமெனவும் அமைச்சர் கூறினார்

## இன்றைய பலன்

ஆனி மாதம்21-ம் திகதி
[5-7-70]

மேஷம்: அவசரக் கோலம் ஆத்திரமிகுதி, உடல்நலமும் பாதிக்கப்படலாம்.

ரிஷிபம்: பிரகாசமான வாழ்வு, பிதாவழி உதவி கிடைக்கும், பெரியோர்கள். ஆதரவு.

மிதுனம்: உழைப்பில் வெற்றி, உதவும் மனப்பான்மை உதயமாகும் சிறப்பான வாழ்வு.

கடகம்: வெளியிடத் தொடர்புகளில் முன்னேற்றமுண்டு. வியாபாரவிருத்தி.

சிம்மம்: ஆரம்ப சூரத்தனம் ஆபத்தில் முடியலாம். அடக்கம் நன்று.

கன்னி: மனை வாழ்வில் பூசல், மனப்போராட்டம். நிதானம் வேண்டும்.

துலாம்: பேச்சில் கவர்ச்சி கலைகளில் ஆர்வம்,குழந்தை உள்ளம்.

விருட்சிகம்: பிரயாணத்துக்குத் திட்டமிடல். புண்ணிய விருப்பு.

தனுசு: வாகன விருத்தி, வரவிலும் திருப்தி நிறைந்த வாழ்வு.

மகரம்: உறவினர்கள் தேடி வருவர் உற்சாகம் பிறக்கும். நல்லநாள்.

கும்பம்: வஞ்சகர் உறவு சஞ்சல மனம். இறைபக்தி நன்று.

மீனம்; அபிப்பிராயபேதம் நண்பர் ஒருவருடன்பகைக்க நேரிடும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

குப்பின் மிக அற்புதமாக நடித்திருக்கிருர். சில கட்டங்களில் முகபாவங்களின் மூலமே, தமது நடிப்பை வெளிக்காட்டுகிருர். மகனாக வரும் ரவிச்சந்திரன் ஓடியாடி, சுறுசுறுப்பாக நடிக்கிருர். தனது காதலியை மணம் முடிப்பதற்காக அவர் போடும் திட்டமெல்லாம் படுதோல்வியடைந்து விடுகிறது. கடைசியில் காதலியே அவரை கைவிட்டு விடுகிருர். காதலியாக வரும், ஷீலா காதல் காட்சிகளில் மிகவும் நெருக்க

## நியமனம்

கோட்டை, சனி

நீர்கொழும்பைச் சேர்ந்த திரு. டொன்டேவிட் உள்ளூராட்சிச் சேவைக் கொமிசன் தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார்.

இச் சபைக்கு தோம்பேயைச் சேர்ந்த திரு. டி. ஏ. பி. சூரியப்பெருமா, அபயகமவைச் சேர்ந்த திரு. எஸ். எஸ். கௌதமதாச, குருணகலையைச் சேர்ந்த திரு. ஜீவானந்த டி. சில்வா, காலியைச் சேர்ந்த வழக்கறிஞர் திரு. எம். எஸ். ஹசன் ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சங்க நிர்வாகிகளாகப் பின் வருவோர் தெரிவு செய்யப் பட்டனர்.

தலைவர் திரு கு. வி. செல்லத்துரை, உபதலைவர் திரு. ஆர். யோசெப், செயலாளர்: திரு சோ கந்தையா, உபசெயலாளர்: திரு சோ. ஞானராசா, தனதிகாரி திரு. வே. குலசேகரம்பிள்ளை. மற்றும் 16 உறுப்பினர்களைக் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப் பட்டது.

தமிழ், ஆங்கில மொழிகளில்
# அச்சு வேலை எதுவானுலும்
## எங்களையும் விசாரியுங்கள்

எமது வர்த்தக அச்சகப் பகுதியில்

- கடிதத் தலைப்புகள்
- அறிமுக அட்டைகள்
- பெரிய சிறிய பிரசுரங்கள் — பிரசுரித்தல்
- புத்தகம் கட்டுதல்
- புதியவகைப் பற்றுசீட்டுப்புத்தகங்கள்
- பெரிய பதிவுப் புத்தகம்
- கோடிடுத்தல்

ஆதியன.

குறைந்த கட்டணத்தில் அனுபவமும் திறமையும் வாய்ந்த ஊழியர்கள் திருப்தியான வேலை செய்கிருர்கள்.

சிறந்த சேவையே எமது நோக்கம்

## ஈழநாடு (வர்த்தக அச்சகப் பகுதி)

தொலைபேசி: 389 த. பெ. எண்: 49,
63, சிவன்கோவில் மேற்கு வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட அயர்லாந்தில்

# மீண்டும்வெடித்தகலவரத்தில் 5 பேர் பலி

லண்டன், ஜூலை 4

**வட அயர்லாந்து தலைநகரான பெல்பாஸ்ட்டில் நேற்றிரவு மீண்டும் மிக மோசமாக கலவரங்கள் வெடித்தன.**

**நேற்றிரவு நடந்த கலவரங்களில்மாத்திரம் 5 பேர் கொல்லப்பட்டனர் இருவர் குழப்பக்காரர்களின் குண்டுகளுக்கு இரையானுர்கள்: ஒருவர் ராணுவ வாகனம் ஒன்றினுல் நெரித்துக் கொல்லப்பட்டார். மற்ற இருவரும் ராணுவத் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானுர்கள்.**

குழப்பங்கள் வெடித்ததைத் தொடர்ந்து 15000 ராணுவத்தினர் கடமைக்கு அழைக்கப்பட்டனர், ஆர்ப்பாட்டக்காரர்கள் ராணுவத்தினருடன் மோதிக்கொண்டார்கள்: இந்த மோதலில் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட எறிகுண்டுகளை அவர்கள் பயன்படுத்திஞர்கள். இந்த குண்டுகளை வீசியதன்காரணமாக ஏராளமான சிப்பாய்கள் காயமடைந்தனர். குழப்பங்களை அடக்குவதற்கு ராணுவத்தினர் குழப்பக்காரர்களுடன் நேரடியாகவே மோதலில் ஈடுபட நேர்ந்தது துப்பாக்கிப்பிரயோகமும் செய்யப்பட்டது. ஆர்ப்பாட்டக்காரர்கள் வீடுகளுக்கும் கட்டிடங்களுக்கும் தீ வைத்தனர். ராணுவ வாகனங்களைத் தாக்கினர். பாதைகளில் குழிகளைவெட்டியும், தடைகளை வைத்தும் போக்குவரத்துக்களைத் தடுத்தனர்.

பெல்பாஸ்ட்டிலும், லண்டன் டெரியிலும் நடந்த குழப்பங்களில் இதுவரைக்கும் சுமார் 12 பேர் பலியாகியிருக்கிருர்கள்.

கடந்த இருவாரங்களாக வட அயர்லாந்தில் நடைபெற்றுவரும் ஆர்ப்பாட்ட குழப்பங்களில் நேற்று நடைபெற்றவை மிக மோசமானவை என்று கருதப்படுகின்றது. வட அயர்லாந்தில் ரோமன் கத்தோலிக்கர்களுக்கும் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்களுக்குமிடையில் மோதல்கள் இடம் பெற்று வருவது தெரிந்ததே. இந்தக் குழப்பங்களையொட்டி பிரிட்டிஷ்காமன்ஸ் சபையில் அங்கத்தவராகவிருக்கும் ரோமன் கத்தோலிக்கரான செல்வி பென டெட்டாப்லிங் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பெல்பாஸ்டில் பத்திரிகை நிலையமொன்றில் ஒருகுண்டு வெடித்ததில் பலர் காயமடைந்தனர். பெல்பாஸ்டிலுள்ள பிரிட்டிஷ்ராணுவ தகவல் பகுதிக் கட்டிடத்தில் குண்டு வெடித்ததில் முன் சுவர்கள் இடிந்துவிழுந்தன. இந்தக் குண்டு வெடிப்பினுல் ஒருவர் காயமுற்ருர். ரேட்டில் போய்க்கொண்டிருந்த கார்கள் தூக்கியெறியப்பட்டன. பலமைல்களுக்கப்பாலும் இந்தக் குண்டு வெடிச் சத்தம் கேட்டதாம்.

## பரிசுத்த பாப்பரசரை கருணுநிதி தரிசித்தார்

ரோம், ஜூலை 4

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணுநிதி நேற்று வத்திக்கானில் பரிசுத்த பாப்பாண்டவரை தரிசித்தார்.

இந்திய மக்கள் அமைதியாக வாழ வேண்டும் என்று பாப்பாண்டவர் ஆசி தெரிவித்ததுடன் பாரத மக்களின் சமாதானப் பிரியத்தையும் பாராட்டினுர். பாப்பாண்டவர் தமது கையெழுத்திட்ட சமாதானச் செய்தியொன்றையும், பதக்கம் ஒன்றையும் திரு.கருணுநிதியிடம் அன்பாக கொடுத்தார். திரு. கருணுநிதி தமிழ்நாட்டுக் கலைஞர்களால் தயாரிக்கப்பட்ட சிறந்த கலைப்பொருட்களை பாப்பாண்டவருக்கு பரிசாகக் கொடுத்தார். தமது கவிதைகளின் மொழிபெயர்ப்புகளையும் திரு கருணுநிதி பாப்பாண்டவருக்குகொடுத்தார்.

திரு. கருணுநிதியும் கோஷ்டியினரும் இருதினங்கள் இத்தாலியில் தங்கியபின்னர் சுவிட்சர்லாந்துக்கு இன்று புறப்படுகிருர்கள்.

100 பிரயாணிகளுடன்

## பிரி. விமானம் கடலில் மூழ்கியது

லண்டன், ஜூலை. 4

100 சுற்றுலா பிரயாணிகளுடன் ஸ்பெயினுக்குப் புறப்பட்ட பிரிட்டிஷ் விமானமொன்றுமத்திய தரைக் கடலில் விழுந்து மூழ்கிவிட்டது. மத்தியதரைக் கடலில் பாஸலோனுவுக்கு அருகில் நடைபெற்ற இந்த விபத்தில் விமானத்திலிருந்த எவருமே தப்பவில்லை என்று தெரிகின்றது.

## பிரிட்டனில் தங்கவிரும்பும் காமன்வெல்த் பிரஜைகள்: 'பேர்மிட்' பெற்ருல் தான் தொழில் கிடைக்கும்

பிரான்ஸ் நடத்திய

## மிகப் பெரிய அணுகுண்டுசோதனை

பாரிஸ், ஜூலை4

பிரான்ஸ் இதுவரை நடத்தியுள்ள அணுகுண்டு சோதனைகளில் எல்லாம் மிகப்பலம்வாய்ந்த ஒரு குண்டு சோதனையை நேற்று நடத்தியது.

டாஹிட்டுக்கு சுமார் 750 மைல் தொலைவிலுள்ள சோதனைத் தளத்தில் இந்த குண்டு வெடிக்கப்பட்டது. இந்தக் குண்டுசோதனையை பிரஞ்சு பாதுகாப்பு அமைச்சர் திரு. டுப்ரே சுமார் 60மைல் தொலைவில் கப்பல் ஒன்றிலிருந்து கவனித்துக் கொண்டிருந்தார் இந்த குண்டு சுமார் ஒரு லட்சம் டி. எம். டி. சக்தி கொண்டது என்று கூறப்படுகின்றது காற்று மண்டலத்தில் அணுபரிசோதனைகளை பிரான்சும், நவசீனுவும் மாத்திரமே நடத்திவருகின்றன. இதர நாடுகள் பூமிக்கு அடியில் அணுகுண்டு சோதனைகளை நடத்துகின்றன.

35 ஆயிரம் பெறுமதியான

## தங்கக் கட்டிகளை விழுங்கிய கடத்தல்காரர்

கோலாப்பூர், ஜூலை4

தங்கக்கட்டிகளை விழுங்கிக் கொண்டு பஸ்ஸில் பிரயாணம் செய்த இரண்டு கள்ளக்கடத்தல் பேர்வழிகளைப் பொலிசார் கைது செய்தனர்.

[illegible] போட்டனர்.

மேற்கூறிய இருவரிலும் சந்தேகம் கொண்ட சுங்க இலாகா அதிகாரிகள் அவர்களின் உடலினை தடவிப் பரிசோதனை செய்தனர். அவர்களுடைய வயிற்றினை

## மீண்டும் பழைய தொழில்

திருச்சூர், ஜூலை 4

கேரளாவில் நிதி மந்திரியாகவிருந்த என். கே. சேஷசன் கல்லூரியொன்றில் ஆசிரியராக சேர்ந்துள்ளார் 1967-ல் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்ற இவர் நிதி மந்திரியாக கடமையாற்றினுர்.

இப்போது கேரள சட்டசபை கலைக்கப்பட்டுள்ளதால் அவர் திருச்சூர் சென். தோமஸ் கல்லூரியில் பேராசிரியராக சேர்ந்துவிட்டார்.

இதற்கு முன்பு இதே கல்லூரியில் இவர் 20 ஆண்டுகள் ஆங்கில ஆசிரியராகவும் கடமையாற்றியுள்ளார்.

## ராஜஸ்தானில் தமிழ்போதனை

ஜெய்ப்பூர், ஜூலை, 4

தென்னுட்டு மொழிகளான தமிழ், தெலுங்கு, மலையாளம் ஆகியவற்றை ராஜஸ்தான் மாநிலத்தில் பத்துப் பாடசாலைகளில் போதிப்பதற்கு மாநில அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

தமிழ் மொழியைக் கற்றுக் கொடுக்க ஆசிரியர்களை அனுப்புவது சம்பந்தமாக ராஜஸ்தான் தமிழ் நாட்டின் உதவியைக் கோரியுள்ளது,

வகுப்புவாத இயக்கங்களுடன் தொடர்புடைய பாடசாலைகளுக்கு உதவி வழங்குவது நிறுத்தப்படுமென ராஜஸ்தான் அரசு அறிவித்துள்ளது.

## 'கூட்டுறவினுல் ஏழைகளுக்கு நன்மை'

கோவை, ஜூலை. 4

'கூட்டுறவு துறையினுல் ஏழைகள் பெரிதும் நன்மை அடைகிருர்கள். கூட்டுறவு துறை மேலும் சிறந்து விளங்கி நாட்டுக்கு சேவை செய்ய இத்துறையில் உள்ளவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும்'.

கோவை சிந்தாமணி சுப்பிர் மார்க்கட் மூன்ருவது ஆண்டு விழாவை தமிழ்நாடு கவர்னர் உஜ்ஜல்சிங் தொடக்கி வைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

## மாஸ்கோவில் கமலா நடனம்

## 'கூட்டணியின் வெற்றி ஆசிரியர்களின் வெற்றி'

யாழ்ப்பாணம், ஞாயிறு

வடமராட்சி ஆசிரியசங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் புலோலி ஆண்கள் கல்லூரியில்நடைபெற்றது. திரு. எஸ். சேவல்கொடியோன் கூட்டத்திற்கு தலைமைவகித்தார்.

அரசாங்கத்தின் நாட்டைக்காப்பாற்றும் நிதிக்கு உடனடியாக சங்க நிதியிலிருந்து ரூபா 501 கொடுக்க வேண்டுமென்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திரு. எஸ். சேவல்கொடியோன் பேசுகையில் புதிய அரசாங்கம் ஆசிரியர்களின் குறைகளை நிச்சயமாக தீர்த்துவைக்குமென நம்பிக்கை தெரிவித்தார்.

புதிய தலைவர் திரு. வ. ஜெ ஜெயராஜசிங்கம் பேசுகையில் ஐக்கிய முன்னணியின் வெற்றி ஆசிரியர்களின் வெற்றியும்தான் ஏனெனில் முன்னைய அரசாங்கத்தினுல் அதிகமாக நசுக்கப்பட்டவர்களும், ஒடுக்கப்பட்டவர்களும் ஆசிரியர்கள்தான். மே மாதம் 27ம் திகதி பிறந்தது சுதந்திர மூச்சு- பழிவாங்கப்பட்டு வேலைநீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் மீண்டும் வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிருர்கள். தொழிற்சங்கங்களை அரசாங்கம் அங்கீகரித்துள்ளது- இவையெல்லாம் ஆசிரியர்களின் நல்ல எதிர்காலத்தை காட்டுகின்றது எனக் கூறினுர்.

பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்களுக்கு இலவச தபால் சேவை வசதிகள் அளிககப்படவேண்டும்,

பட்டதாரி ஆசிரியர்கள் கல்வி டிப்புளோமா பரீட்சைக்கு வெளிமாணவர்களாகத் தோற்ற அனுமதிக்கப்படவேண்டும்.

ஆசிரியர் சம்பளத்தில் எடுக்கும் 'வரிக்கழிவு' முறையிலுள்ள குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படவேண்டும்.

விளையாட்டுப் பயிற்சித் தராதரத்தைக் கொண்டுள்ள ஆசிரியர்களுக்கு தகுதிகாண் பரீட்சையின்றி சம்பள உயர்ச்சி கொடுக்கப்படவேண்டும்.

எல்லா ஆசிரியர்களுக்கும் ஒரு தொழிற்சங்கம் நிறுவ ஆவனசெய்யவேண்டும்.

சேவைமூப்பு, தகமை முதலியவை கவனிக்கப்படாமல் சமீபத்தில் ஆசிரியர்சேவையில் செய்யப்பட்ட நியமனங்கள்யாவும்மறு பரிசீலனை செய்யப்படவேண்டும்.

55 வயதில் கட்டாயஓய்வு பெறுகின்றவர்களுக்கு சலுகை காட்டும் முகமாக பிரிவுஎண் 55ஆக இருக்க வேண்டும்.

பின்வருவோர் நிர்வாக உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர்:- வ. ஜெ. ஜெயராஜசிங்கம், செயலாளர் எம். இராமக்கிருஷ்ணன், பொருளாளர்:- எம். செல்வராசா, உபதலைவர்கள்:- எஸ். செல்லத்துரை, க. புவனசுந்தரம், வட. மா. ஆ. ச. பிரதிநிதிகள்:- தலைவர், செயலாளர், பொருளாளர் உட்பட திருவாளர்கள்: எஸ். சேவல்கொடியோன், எஸ். கந்தையா, த. கிருஷ்ணபிள்ளை, உதவிச் செயலா எஸ். திபீசுயஸ்.

## திருமலை-மூதூர் படகுசேவை தேசியமயம் ஆகும்?

கந்தளாய், சனி

திருமலை — மூதூர் படகுச் சேவை விரைவில் தேசியமயமாக்கப்பட விருக்கிறது. இத்தகவலை போக்குவரத்து அமைச்சரின் பாராளுமன்றக் காரியதரிசி திரு. ஏ. எல். அப்துல்மஜீத் இன்று தெரிவித்தார்,

கந்தளாயில் நடைபெற்ற கூட்டமொன்றில் திரு. மஜீத் பேசினுர். பிரயாணிகளின் போக்குவரத்துக் கஷ்டங்களை நீக்குமுகமாக திருமலை- மூதூர் படகுச்சேவைதேசியமயமாக்கப்பட விருப்பதாகவும் இதற்கான நடவடிக்கைகளை அமைச்சு மேற்கொண்டுள்ளதாகவும் அவர் சொன்னுர்.

## இராணுவ, கடற்படை முறை மாற்றியமைக்கப்படும்

கொழும்பு, சனி

இராணுவஅமைப்பு முறை தேசிய அபிவிருத்திக்குத் [illegible]

[illegible] படவிருப்பதாக சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பேர்மிட்' பெற்றால் தான் தொழில் கிடைக்கும்

லண்டன், ஜூலை 4

காமன்வெல்த் பிரஜைகள் பிரிட்டனில் குடியேறுவது சம்பந்தமாக பிரிட்டிஷ் உள்நாட்டமைச்சர் டாகிளஸ் மோல்டிட்ஸ் புதிய கட்டுப்பாடுகள் சிலவற்றை அறிவித்திருக்கிறார்.

பிரிட்டனில் தங்குவதற்கு வரும் காமன்வெல்த் பிரஜைகள் ஏற்கனவே தொழில் செய்வதற்கான பெர்மிட் பெற்றுக்கொள்ள வேண்டும்

உள்நாட்டில் குறிப்பிட்ட தொழிலுக்கு ஆள்கிடைக்காத பட்சத்திலேயே இந்த பெர்மிட் அவர்களுக்கு கொடுக்கப்படும் இவர்களில் பிரிட்டனில் நிரந்தரமாக தங்குவதற்கு அனுமதிப்பது பற்றி நான்கு ஆண்டுகளுக்குப் பிறகே ஆலோசிக்கப்படும். இவர்களைத் தங்கள் நாட்டுக்குத் திரும்பிப் போகும்படி அரசாங்கம் நிர்ப்பந்திக்க மாட்டாது. ஆனால் திரும்பிப் போக விரும்புகிறவர்களுக்கு உதவியளிக்கப்படும்'

## இந்தியாவில்

# வகுப்புவாத இயக்கங்கள் தடை செய்யப்படும்

### சட்டம் தயாராகின்றது

புதுடில்லி, ஜூலை 4

சிவசேனை மற்றும் வகுப்புவாதச் சக்திகளை ஒடுக்க மத்திய அரசாங்கம் சட்டம் தயாரித்துவருகிறது. ஆட்சிமன்றத்தின் மழைகாலத் தொடரில் இச்சட்டத்துக்கான மசோதா தாக்கல் செய்யப்படும்.

உள்துறை இலாகாவின் அரசியல் பிரிவு இம்மசோதாவைத் தயாரிப்பதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது மாநில சுயம்சேவக் சங்கம், சிவசேனை, ஜமயத் இஸ்லாமி போன்ற நிறுவனங்களின் பகிரங்க நடவடிக்கைகளைக் கடுமையாக கட்டுப்படுத்தும் வகையில் இந்த மசோதா உருவாகுமெனத் தெரிகிறது

இந்நிறுவனங்களை சட்டவிரோதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கொண்டுவர, சட்டவிரோத விளக்கத்தை மாற்றவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தற்போது உள்துறை இலாகாவிலிருந்து அதிகாரிகள் பிரிவைத் தனியாகப் பிரித்து, மந்திரிசபைச் செயலகத்தின் பொறுப்பில் விடவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

உளவு மத்திய துப்பறியும் பிரிவு, வருமான உளவறிவுப் பிரிவு ஆகியவை கொண்ட உள்நாட்டுப் பாதுகாப்பு இலாகா சிறிது காலத்துக்கு பின்பு அமைக்கப்படலாமென்று உத்தியோகபூர்வமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# "யாழ்ப்பாணப் பிரதேசம் செல்வம் கொழிக்க..."

சுழிபுரம், சனி

வெளி இடங்களில் பெரும் சொத்துக்களை வைத்திருப்பவர்கள் கைத்தொழில்வியாபாரம் ஆகிய துறைகளில் யாழ்ப்பாணத்தை முன்னேற்றமடையச் செய்வதன் மூலம் தொழில் வேலை வாய்ப்பை பெறலாம்.

காரைநகர் இந்துக் கல்லூரி வருடாந்த விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வட்டுக்கோட்டை எம்.பி. திரு ஏ. தியாகராசா மேற்கண்டவாறு கூறினார்.

திரு தியாகராசா மேலும் பேசுகையில், கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக செய்துவந்த பொதுச் சேவையை மேலும் நல்ல விரிவாகச் செய்ய எனக்கு நல்ல வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பல்வேறு வகைகளில் செல்வம் கொழிக்கும் பிரதேசமாக வளரவேண்டும் என்றார்.

கல்லூரி அதிபர் பி. எஸ். குமாரசாமி விழாவுக்குத் தலைமை வகித்தார்.

## நாகூர் ஹனிபா தாக்கப்பட்டதின் எதிரொலி

நாகபட்டினம், ஜூலை 4

நாகபட்டினம் கமாலியா மஜீது தெருவில் நடந்த கவுதுல் அஜ்லம் நினைவுவிழாவில் தி. மு. க. பாடகர் நாகூர் ஹனிபா கச்சேரி நடத்தும்போது ஒரு பழைய பாடலைப் பாடும்படி சிலர் வற்புறுத்தவே அவர் அப்பாடலை மறந்துவிட்டதாகக் கூறினாராம்.

இதைத் தொடர்ந்து அவரைப் பலர் பலமாகத் தாக்கத்தொடங்கினராம். இதையொட்டி நாலு பேரைப் பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

## தியேட்டர் அதிபருக்கு மிரட்டல்

ஏர்வாடி, ஜூலை 4

நெல்லை மாவட்டம் வள்ளியூரைச் சேர்ந்த சினிமா தியேட்டர் அதிபரான செல்வநாயகத்திற்கு நக்ஸல்பாரிகள் மிரட்டல் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்கள்.

பஞ்சாயத்துத் தேர்தலில் போட்டியிடுவதற்கான நடவடிக்கைகளில் அவர் ஈடுபட்டுள்ளார்.

"தேர்தல் வேலைகளை இன்னும் ஒரு வாரத்துக்குள் நிறுத்திவிடவேண்டும். இல்லாவிட்டால் கல்கத்தாவிலிருந்து வரவழைக்கப்பட்டிருக்கும் துப்பாக்கிகளில் முதல் துப்பாக்கிக்குப் பலியாவீர்" என்று நக்ஸல்பாரிகள் அவருக்கு மிரட்டல் கடிதம் அனுப்பிவைத்துள்ளனர்.

அவருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் துப்பாக்கியின் படம் போடப்பட்டுள்ளது. செல்வநாயகம் அக்கடிதத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளார்.

விசாரணை நடைபெற்று வருகிறது.

## குருபூசை

சரவணை, சனி

சரவணை கதிர்வேலாயுத சுவாமி கோவிலில் நாளை மறுதினம் மாணிக்கவாசக சுவாமி குருபூசை நடைபெறவுள்ளது. இதற்கான ஒழுங்குகளை சரவணை சைவ இளைஞர் மன்றத்தினர் செய்து வருகின்றனர்.

தங்கக்கட்டிகளை விழுங்கிக் கொண்டு பஸ்ஸில் பிரயாணம் செய்த இரண்டு கள்ளக்கடத்தல் பேர்வழிகளைப் பொலிசார் கைது செய்தனர்.

ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த எஸ். வி. மாலி, எஸ். பி. ரவால் ஆகிய இருவரும் பிஸ்கட் போல் தட்டையாக்கப்பட்டிருந்த தங்கக்கட்டிகளை விழுங்கிக் கொண்டு உல்லாச பஸ்ஸொன்றில் பெல்காம் என்ற ஊருக்குப் போய்க் கொண்டிருந்தார்கள்.

சுங்க இலாகா பறக்கும் படை அதிகாரிகள் அந்த பஸ்ஸை நிறுத்தி சோதனை

மேற்கூறிய இருவரிலும் சந்தேகம் கொண்ட சுங்க இலாகா அதிகாரிகள் அவர்களின் உடலினை தடவிப் பரிசோதனை செய்தனர். அவர்களுடைய வயிற்றினை அதிகாரிகள் தடவியபோது அந்த இருவரும் வலியால் துடித்தனர்.

வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்ட அந்த இருவருக்கும் மருந்து கொடுத்து வயிற்றிலிருந்த தங்கக் கட்டிகளை வைத்தியர்கள் வெளியே எடுத்தனர். இவற்றின் பெறுமதி 35 ஆயிரம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

# 'பட்டதாரிகளின் சம்பளம் வழங்க ஆவன செய்க'

### பயிற்றுப்பட்ட பட்டதாரி சங்கம் மகஜர்

யாழ்ப்பாணம். ஞாயிறு

நாங்கள் பயிற்றப்பட்ட ஆசிரியர்களாக பாடசாலைகளில் சேவை செய்யும் பொழுதே வெளியார் மாணவர்களாகப் பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டதாரிகளானோம். முன்னைய கல்வி அமைச்சரின் நீதியற்ற, கருணையற்ற செயல்களினாலும் சட்டங்களினாலும் நாம்பாதிக்கப்பட்டிருக்கின்றோம். எங்கள் சம்பளவிடயத்தை மீண்டும் மறுபரிசீலனைசெய்க.

இவ்வாறு கூறும் மகஜர் ஒன்றை சம்பளம் பெறாத பயிற்றப்பட்ட பட்டதாரிகள் ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சர் திரு: பதியுதீன் மாமூத்துக்கு அனுப்பிவைத்துள்ளது அம்மகஜரில்மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் 1-10-67 க்கு முன் பட்டதாரியாகியிருந்தால், பட்டதாரிகளுக்குரிய சம்பளத்தோடு சம்பள உயர்வு அளிக்கப்படுகிறது. ஆனால் அதற்குப் பின் இவ்விதம் தேர்வு பெற்ற பயிற்றப்பட்ட பட்டதாரிகளுக்கு இச்சலுகைகளை வழங்க முன்னைய அரசாங்கம் மறுத்துவிட்டது.

பல பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் முழுச்சம்பள விடுமுறையோடு பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம் பெற்றதுமல்லாமல் அவர்களுக்கு பட்டதாரிகள் சம்பளம் வழங்கப்படுவதையும் நாம் அறியமுடிகிறது. எனவே இவ்விடயத்தை உங்கள் மேலான கவனத்தில் கொண்டு வேண்டிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

## இலங்கையில் ஜப்பான் தூதுகோஷ்டி

கோட்டை, சனி

ஜப்பானிய பாராளுமன்ற மூவர் அடங்கிய தூதுகோஷ்டி ஒன்று நேற்று இலங்கைக்கு விஜயஞ் செய்துள்ளது.

சோஷலிசக் கட்சியைச் சேர்ந்த இவர்கள் நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா, வர்த்தக அமைச்சர் திரு. இலங்கரத்தின, சுகாதார அமைச்சர் திரு. ஆரியதாசா ஆகியோரைச் சந்தித்துப் பேசவிருக்கின்றனர்.

## கலாச்சார சபைகளில் அதிருப்தி

கோட்டை, சனி

கலாச்சாரச்சபைகள் போன்றவற்றை நீக்க வேண்டுமென கலாச்சார அமைச்சர் திரு. எஸ் எஸ். குலதிலக்கா கருதுகிறார்.

நாடகம், சங்கதம், நடனம், ஓவியம், கலாச்சார திரைப்படங்கள் இலக்கியங்கள் போன்றவற்றைச் சீர்திருத்த எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்பற்றி, இலங்கை மகாஜன கலா மண்டலயம் அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடாத்திய பொழுதே அவர் இவ்வாறு கூறியதாகத் தெரிகிறது. இப்படிப்பட்டசபை அங்கத்தவர்கள் பணம் பெற்றும், அதற்குப்பயனுள்ள பெறுமதியான வேலைசெய்வதில்லை எனவும் அமைச்சர் கூறினார்.

ஸ்ரீ லங்கா சாகித்திய மண்டலம், தேசியநாடக சபை பற்றியும் இவர்கள் அதிருப்தி தெரிவித்தனர்.

மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

## மாஸ்கோவில் கமலா நடனம்

மாஸ்கோ, ஜூலை.4

ரஷ்யதலைநகரான மாஸ்கோவில் குமாரி கமலாவின் நடனம் நடைபெற்றது. இவருடைய நடனத்தை ரஷ்சியர்கள் வெகுவாகப் புகழ்ந்துள்ளனர். தாஷ்கண்டிலும், லெனின்கிராடிலும் இவருடைய நடனம் நிகழும்.

## நிஜலிங்கப்பா ஆஸ்பத்திரியில்

பம்பாய், ஜூலை. 4

சின்டிகேட் காங்கிரஸ் தலைவர் நிஜலிங்கப்பாவுக்கு கண்ணில் நோய் ஏற்பட்டுள்ளது. அவர் பம்பாய்ஆஸ்பத்திரி யொன்றில் சிகிச்சை பெற்று வருகிறார்.

தனது சொந்த மாநிலமான மைசூரில் இருந்து பம்பாய்க்கு சிகிச்சை பெறுவதற்காக வந்துள்ள இவர் ஏற்கனவே உடல் நலக்குறைவினாலும் பாதிக்கப்பட்டுள்ளார்.

## "இந்திய தமிழ் சஞ்சிகைகளை தடைசெய்க"

உடுப்பிட்டி, சனி

"ஈழத்து இலக்கிய வளர்ச்சி மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. இதற்குக் காரணம் இந்தியப் பத்திரிகைகளின் விற்பனை ஈழத்துத் தமிழ்ப்பத்திரிகைகளைக்குன்றச் செய்வதேயாகும். ஆதலால் இந்தியப் பத்திரிகைகள் சஞ்சிகைகளைத் தடைசெய்வது பற்றிப்பரிசீலனை செய்யும் வரை தற்காலிகமாக இந்தியத்தமிழ்ச் சஞ்சிகைகளை இறக்குமதி செய்வதைத் தடை செய்யவேண்டும்"

இவ்வாறு கோரும் மகஜரொன்றைகரவெட்டிவாணி கலைக்கழக இயக்குனர் பண்டிதர் திரு. க. வீரகத்தி பிரதமருக்கும் சம்பந்தப்பட்ட அமைச்சருக்கும் அனுப்பிவைத்துள்ளார்

இலங்கையில் பத்திரிகைத் தொழில் மூலம் வேலையில்லாத்திண்டாட்டத்தை ஆ பாக்க இதுவும் ஒரு நல்ல சந்தர்ப்பம் என்றும் அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மாற்றியமைக்கப்படும்

கொழும்பு, சனி

இராணுவஅமைப்பு முறை தேசிய அபிவிருத்திக்குத் தக்கபடி மாற்றியமைக்கப்படவிருக்கிறது. இதற்கான நடவடிக்கைகள்மேற் கொள்ளப்படவிருக்கின்றன.

தக்கமுறையில் பயன் பயன்படுத்தப்படாமல் இருக்கும் இராணுவத்தை விவசாயத்துறையில் ஈடுபடுத்தக்கூடிய முறையில் விதிகள் மாற்றியமைக்கப்படவிருப்பதாக சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடற்படைமுறை மீன்பிடிக்கும் தொழிலுக்கும், மீன்பிடியாளர்களுக்கும் உதவக்கூடிய முறையில் மாற்றியமைக்கப்படும் என்றும், ஆகாயப்படையினர் தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குவார்கள் என்றும் அவர் மேலும் கூறினார். (சி.பி.ஏ)

# தென்னிலங்கையில் கட்சிகளை மாறிமாறி அனுப்புகின்றனர்

### ஆனால் வடக்கில் தமிழரசு மட்டும்...

புத்தூர், சனி

1956-ம் ஆண்டு தொடக்கம் சென்ற பொதுத்தேர்தல் வரை வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து ஒரே தலைவரின் கீழ் பெரும்பான்மைப பலத்துடன் தமிழ் மக்கள் தமிழரசுக் கட்சியை ஆட்சிமன்றம் அனுப்பிவருகின்றனர். ஆனால் தென்னிலங்கைசிங்களமக்கள் ஆளும் கட்சிகளை ஆட்சிபீடத்துக்கு மாற்றிமாற்றிஅனுப்பிவருகின்றனர். தென்னிலங்கையில் சிங்களமக்கள் தமது கட்சிகளில் வைத்துள்ள பற்றையும், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்கள் தமிழரசுக் கட்சியில் வைத்துள்ள பற்றையும் மக்கள் அளித்த தீர்ப்பிலிருந்து அறிந்துகொள்ள முடியும்."

இவ்வாறு புத்தூரைச் சேர்ந்த ஏழு வாலிப முன்னணிக் கிளைகளினால் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசிய தமிழரசுக் கட்சிச் செயலாளர் திரு. அமிர்தலிங்கம் கூறினார்.

நீர்வேலியில் இருந்து மாட்டுவண்டிகளிலும் சைக்கிள்களிலும் ட்ராக்டர்களிலும் மக்கள் பவனிவர மத்தியில் ட்ராக்டரில் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட வீட்டினுள் தமிழரசு எம். பிக்கள் புத்தூருக்கு ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர்.

திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

விடுதலைப் பாதையை நோக்கிச் செல்லும் எங்களுக்கு வெற்றி தோல்வி பெரிதல்ல. அந்நியர் இந்நாட்டில் கால் வைத்த பொழுது நமது தமிழினம் எந்த நிலையில் இருந்ததோ, அந்த நிலை மீண்டும் வரும் வரை நாம் செயற்படுவோம். நாட்டைக் காப்பதும், தாய்மொழியைப் பேணுவதுமே எமது லட்சியம்.

## விஞ்ஞானத்தை ஊக்குவிக்க திரைப்படங்கள்

கோட்டை, சனி

விஞ்ஞானத்தை ஊக்குவிக்கும் இலங்கைச் சங்கம் நாட்டில் விஞ்ஞானம் பற்றிய அறிவை வளர்க்க மக்களிடையே விஞ்ஞான திரைப்படங்களைக் காண்பிக்க ஒழுங்குகள் செய்துள்ளது.

நேற்றுத் தொடக்கம் ஜூலை எட்டாம் திகதிவரை மேற்படி திரைப்படங்கள் காண்பிகப்படவுள்ளன. கொழும்பு லோட்டஸ் வீதியிலுள்ள தபால் தந்திக் காரியாலயத்தில் மாலை 4-30 மணியிலிருந்து மாலை 5-30 மணிவரை இப்படங்கள் காண்பிக்கப்படவிருக்கின்றன.

பவனத்தின் நிலையற்ற பரம்பல், ஈர்ப்புச்சக்தி, பனிக்கட்டி, இரகசியங்கள், பூமியின் உருவம் ரொக்கட் ஆராய்ச்சி போன்ற பலவற்றை விளக்கும் திரைப்படங்கள் காட்டப்படவுள்ளன. இப்படங்களை பொதுமக்கள் கட்டணமெதுவுமின்றிப் பார்க்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## நிதிவழங்க முடிவு

யாழ்ப்பாணம், ஞாயிறு

உசன் இராமநாதன் மகா வித்தியாலய 'ஆசான் அவை' நாட்டைக்காக்கும் நிதிக்கு 200 ரூபா வழங்குவதென தீர்மானித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

எக்காரணம் பற்றியும் வழக்காடுவது ஒரு பெரிய தவறு. அது சகதிக்குள் ஒருவரை ஆழ்த்திவிடும். வேறுவழிவகை இருக்கக்கூடுமாயின் யாரும் வழக்காடப் போகப்படாது. பிறர் இழுப்பதாயின் வழக்காடத்தான் வேண்டி இருக்கலாம், ஆனாலும் எதாவது ஒரு வழியில் அதை சமரசமாகத் தீர்த்துக்கொள்வதே விவேகம் எல்லாம் தெய்வத்தின் கையிலேயே உள்ளது. நாம் வெறும் பொம்மைகள். எல்லாம் அவர் விருப்பப்படியே நடக்கும். — சுவாமி ராமதாஸ்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஆனி மாதம் 21-ந் திகதி (5-7-70)


## ஆசிரியர் இளைப்பாற்றுத் திட்டம்

ஆசிரியர்களும் 55 வயதில் இளைப்பாற வேண்டுமென்பதுபற்றி தேசிய ஆசிரியர்சங்கத் தூதுக்குழுவொன்று சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளைப் பேட்டி கண்டு தங்கள் கோரிக்கைகளைச் சமர்ப்பித்திருப்பதுடன் ஆசிரியர்களின் இளைப்பாற்றுத்திட்டம் சம்பந்தமாக நிலைமையைத்தெளிவுபடுத்தியுமிருக்கின்றது. 55 வயது இளைப்பாற்றுத் திட்டத்தின் படி இளைப்பாறுவோருக்கு, (சேவைக்காலம் நாற்பது வருடத்திற்கு அதிகரிக்காத திட்டத்திற்கமைய) ஒரு சலுகையாக அவர்களதுசேவைக் காலத்துடன் 5 வருடத்துக்குப் பதிலாக 10 வருடம் என சேர்க்கப்பட வேண்டுமென தூதுக்குழு கேட்டிருக்கிறது. இளைப்பாறும் ஆசிரியர்களின் பென்ஷனைப் பொறுத்த வரையில் அவர்களது கோரிக்கை பொருத்தமே. இளைப்பாற்றுத் திட்டம் சம்பந்தமாக அதிகாரிகள் தெரிவித்துள்ள விளக்கத்தின் படி 1970-ம் ஆண்டு ஜுலை மாதம் முதலாம் திகதிக்கும் 1970-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ந் திகதிக்கும் இடையே 55 வயதாகின்றவரது சேவைக்காலம் ஒரு வருடத்துக்கு நீடிக்கப்படும் நீடிக்கப்பட்ட அடுத்த பிறந்த தினத்தோடு அவர்கள் இளைப்பாற வேண்டும். இந்தக் காலத்தில் மூன்று மாத அறிவித்தலுடன் யாரையும் ஒய்வுபெறச் செய்யும் உரிமை அமைச்சருக்கு உண்டு. 1971-ம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதிக்குப்பின் 55 வயதாகின்றவர் எவரும் அந்தத் திகதியில் இளைப்பாறுவார். 55 வயதாகி இதுவரை சேவை நீடிக்கப்பட்டோர் அனைவரும் அதாவது 55 வயதிருறென்றால் அவர் அந்தத் திகதியுடன் ஓய்வு பெற வேண்டும். இடைநேரத்தில் அவர் ஓய்வு பெற்றதும் அவர் படிப்பித்த பிள்ளைகளின் நிலை என்ன? (ஏப்ரல் மாதத்துடன் ஓய்வுபெற வேண்டியிருக்கிறதே, அடுத்து நான் என்ன செய்கிறது. குடும்பத்தை எப்படிச் சமாளிக்கிறது') என்று ஜனவரி மாதத்திலேயே கவலைப்படத் தொடங்கி தமது தொழிலில் அக்கறை செலுத்தாத ஆசிரியர்களின் நிலைவேறு) இளைப்பாறும் ஆசிரியர்களின் இடத்தை நிரப்புவதற்குப் புதிய இளம் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள் என்பது உண்மைதான். ஆனால் கடந்த கால அனுபவங்களிலிருந்து இளைப்பாறும் ஆசிரியர்களின் இடத்துக்குஉடனடியாகபுதிய நியமனம் செய்யப்படவேண்டுமென்பதையே நாம் வலியுறுத்த விரும்புகிறோம். இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்குப்பதிலாக வேறு ஆசிரியர்கள் நியமிக்கப்படாமலும் இளைப்பாறிய ஆசிரியர்களுக்குப் பதிலாக புதிய ஆசிரியர்களும் நியமிக்கப் படாதபாடசாலைகள் பலவுள. இதனால்மாணவர்படும் கஷ்டமும் கொஞ்சமல்ல. இதே துர்ப்பாக்கியநிலை 55 வயது இளைப்பாற்றுத் திட்டத்தின் கீழ் இளைப்பாறும் ஆசிரியர்கள் பணியாற்றும் பாடசாலைகளுக்கும் அங்கு கல்வி பயிலும் மாணவர்களுக்கும ஏற்படக்கூடாதென்பதே நமது கவலை. எனவே இளைப்பாறும் ஆசிரியர்கள் எந்தத் திகதியில்பாடசாலைகளைவிட்டுவெளியேறுகிறார்களோ அதே திகதியில் அவர்களின்இடத்தை நிரப்பும் புதிய ஆசிரியர்கள் அந்தப் பாடசாலைகளில்தமது கடமையை ஏற்கக்கூடியதாக அமைச்சு திட்டம் தயாரிக்க வேண்டும். இதற்கு ஏற்ற

# 1944-ம் ஆண்டில் சமஅந்தஸ்தை ஆதரித்தவர் காலஞ்சென்ற பிரதமர்

[செனட்டர் திருச்செல்வம் செனட்சபையில் பேசிய உரையின் நேற்றைய தொடர்ச்சி]

இந்தச்சந்தர்ப்பத்தில் சட்டசபையில் தமிழும் சிங்களமும் இந்நாட்டின் அரசகரும மொழியாக வேண்டுமென்ற ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்ட வேளையில் காலஞ்சென்ற திரு. பண்டாரநாயக்காவும், அப்போதிருந்த யாழ்ப்பாண வாக்காளர்களால் தெரிவு செய்யப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஒரேயொரு தமிழ் அங்கத்தவரான திரு. பி. கந்தையாவும் நிகழ்த்திய உரையை எடுத்துக்கூற விரும்புகின்றேன்.

சட்டசபையில் 1944 ம் ஆண்டு அதாவது இந்நாடு சுதந்திரமடைய முன்பு பின்வரும் அம்சங்களோடு ஒரு தீர்மானம்கொண்டுவரப்பட்டதென்பதை நான் இச்சபைக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இந்தத் தீர்மானத்தை களனித்தொகுதி ஆட்சிமன்ற அங்கத்தவரான திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன 1944 ம் ஆண்டு மே மாதம் 25ம் திகதி கொண்டுவந்தார். குறிப்பிட்ட சில வருடகாலப் பகுதியில்சிங்களமொழியைஅரசகரும மொழியாக்கவேண்டும் என்னும் நோக்குடனேயே திரு. ஜே. ஆர். ஜெயவர்தன இத்தீர்மானத்தைப் பிரேரித்தார். அத்தீர்மானம் குறிப்பிடுவதாவது:-

- நாட்டின் சகல பாடசாலைகளிலும் சிங்கள மொழியே போதனமொழியாக்கப்படவேண்டும்.
- அரசாங்க பரீட்சைகள் யாவற்றிலும் சிங்களம் முக்கியபாடமாகவிருக்க வேண்டும்.
- சட்டசபையின் அலுவல்கள்யாவும்சிங்களமொழியில் நடைபெறுவதற்கு சட்டம் இயற்றப்பட வேண்டும்.
- சபையில் மொழிபெயர்ப்புக்கும்மற்றும்வேற்றுமொழிகளில் உள்ள நூல்களை சிங்கள மொழியில் பெயர்ப்பதற்கும் ஒரு கமிஷன் நிறுவப்படவேண்டும்.
- ஆங்கிலத்திலிருந்து சிங்களத்தில் மாற்றுவதில் ஏற்படும் பாதிப்புகளைக் கவனித்து வேண்டிய நடவடிக்

மேற்படி மாற்றங்கள் ஏற்படும்போது அம்மாற்றங்களைக் கவனித்து மேலும் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளுக்கு அறிக்கை சமர்ப்பிக்க ஒரு கமிஷன் நியமிக்கப்படவேண்டும்.

இத்தீர்மானம் சபையில் விவாதிக்கப்பட்டது. திரு. நல்லையா இந்தத் திருத்தப் பிரேரணையைக் கொண்டு வந்தார். இச் செனட்சபைத் தலைவராகவிருப்பவர் அப்போது ஒரு அங்கத்தவராகவிருந்தவராகையால் அந்த வேளையில் இத்தீர்மானத்தையிட்டு அவரும் சில கருத்துக்களைத் தெரிவித்திருப்பார் எனநான் நம்புகிறேன் மேற்படி தீர்மானத்தில் தமிழ்' என்ற சொல்லைக் கொண்டு வந்து திருத்தம் கொண்டு வந்தவர் திரு. நல்லையாவாகும். திருத்தம் கொண்டு வந்தபின்னர் இத்தீர்மானத்தை ஆதரித்து 29 பேரும் எதிர்த்து 8பேரும் வாக்களித்தனர். ஆதரித்து வாக்களித்தவர்களில் திரு. பண்டாரநாயக்காவும் ஒருவராவர். இந்தநாட்டில்இரு அரசகரும மொழிகள் இருக்க வேண்டுமென்ற கோரிக்கையை ஆதரித்தவர்களில் இவரும் ஒருவராவர்

தமிழும்அரசகரும மொழியாகவிருக்கவேண்டும் என்ற தீர்மானத்தையிட்டு 1944ம் ஆண்டு 25ம் திகதி திரு பண்டாரநாயக்கா கூறியது இது தான்:-

இந்தப் பிரச்னையைக் கொண்டுவந்தவரின் மனதில் இந்தக் கருத்து ஒரு போதும் தோன்றியிருக்க மாட்டாது என நான் நினைக்கிறேன். தமிழ் மொழியும் அரசகரும மொழியாவதில் எதுவித கஷ்டமும் இருக்குமென நான் நினைக்கவில்லை. இந்தநட்புறவை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும் அதாவது பல்வேறு சமுகங்களுக்கிடையே குறிப்பிட்ட எல்லைக்குள் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும்என்ற எமதுகுறிக்கோளை நிவிர்த்தியாக்கவேண்டும். எனவே இந்த இருமொழிகளும் அரசகரும மொழியாவதில் எனக்கு ஒருவித ஆட்சேபமுமில்லை. இதனால் எதுவித மானகஷ்டமோ, நஷ்டமோ ஏற்படுத்தோ ஏற்படுமென

மட்டும் கோரியபோது இன்றும் உயிரோடு இருக்கிற ஒரு வழக்கறிஞர்- ஒரு பெரியார் கூறியதாது: ''சோல்பரி ஆணைக்குழுவிடம் சென்று ஒரேயொரு கோரிக்கையை மட்டும் கேளுங்கள். இலங்கையின் அரசகரும மொழிகளாக தமிழும் சிங்களமும் இருக்கவேண்டுமெனக்கோரவும், மொழியுரிமையே எங்களுக்குத் தேவையான பாதுகாப்பு. அதைவிடவேறு ஒரு பாதுகாப்பும் இல்லை.''

இந்தப்பெரியார் கோரும்படி கேட்டுக்கொண்ட மேற்படி கோரிக்கை சோல்பரி ஆணைக்குழுவிடம் கோரப்படவில்லை. அதே வேளையில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கோரிய 50க்கு 50ம் கொடுக்கப்படவில்லை. ஆனால் எங்களுக்கு சுதந்திர அரசியல் அமைப்பொன்று வழக்கப்பட்டது: மேற்படி தீர்மானத்தில் குறிப்பிட்டபடி சிங்களமும் தமிழும் நாட்டின் அரசகருமமொழிகளாக்கப்படும் என்ற பெரும்பான்மைச் சமூகத்தின் உறுதிமொழியையேற்று ஆட்சிமன்றத்திலிருந்த தமிழ்அங்கத்தவர்கள் புதிய திட்டத்தை ஆதரித்து வாக்களித்தனர்.

இதை இங்கு நான் ஏன் குறிப்பிட்டேனெனில் திரு. பண்டாரநாயக்கா ஒரு தலைவராக அரசியல் ஞானியாக மட்டும் இருந்ததோடு மட்டுமன்றி இந்நாட்டின் அரசகருமமொழிகளாக சிங்களமும் தமிழும் இருக்க வேண்டுமென்பதில் அவர் பெருவிருப்புடையவராக விருந்தார் என்பதை எடுத்துக்காட்டவே குறிப்பிட்டேன்அத்தகையஒருநடுநிலைமையாளர் பின்னர் சந்தர்ப்ப சூழ்நிலையால் உந்தப்பட்டு ஒன்றும் செய்யவியலாதவராக 1956-ம் ஆண்டு இந்தநாட்டில் சிங்களத்தை மாத்திரம் அரசகரும மொழியாக்க மசோதா ஒன்றைக்கொண்டு வந்தார்

பழையசரித்திரங்களையெல்லாம் இங்கு நான் கூறவிரும்பவில்லையெனினும் இங்கு சரித்திரத்தைப் பற்றிக் கூறவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது நான் ஒரு சரித்திரவியலாளர் மதிப்புக்குரிய தபால்தந்தித் தொடர்பமைச்சர் ஒரு தொழில்நுட்பவியலாளர் எவ்வாறிருந்தாலும் நான் எனது வாதத்துக்கு சரித்திர சம்பவங்களையே எடுத்துக் காட்டுவேன். நான் வெறுப்பைப்பற்றிக் கூறுவேன், மதிப்புக்குரிய அமைச்சர் 1956ம் ஆண்டு 5-ம் திகதி இலங்கையில் இருந்திருந்தால் காலிமுகத்திடலில் சிங்களச் சட்டத்தை எதிர்த்து அமைதியாகப் போராட்டம் நடத்தியபோது காடையர்கள் அதைத் தாக்கியதை அவர் நேரில் பார்த்திருப்பார் அத்துடன் வெறுப்பு எது என்பதையும் கண்டிருப்பார், (தொடரும்)

## ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரன் உற்சவம்

ஈழத்திலோ முதலாவதாக ஒட்டுசுட்டானில் தான்தோன்றி ஈசுபரன் தோன்றினார் இதன் பின்னர் தான் மட்டக்கிளப்பில் உள்ள கொக்கட்டிச்சோலையிலும் ஒரு ஈசன் காட்சி கொடுத்தார். ஈழநாட்டின் நாலாபக்கங்களிலுமுள்ள மக்களுக்கு ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈசுபரன் என்றால் தனிப்பெரும் பிரேமை. எந்தமதத்தைச் சார்ந்தவர்களும் இங்கு வந்து வழிபாடுசெய்கின்றனர். அழகிய வேலைப்பாடு

ஒட்டுக்கு தீவைத்தான். ஆனால் அவ்விடத்தில் தீ பிடிக்காமல் இருப்பதைக் கண்ட அவன் ஆச்சரியப்பட்டு அவ்விடத்தை மண்வெட்டியால் துப்பரவு செய்யும் போது கல்லாகக்கிடந்த ஒரு திடலையும் வெட்டினான். இரத்தம் பீறிட்டு வழிந்தோட ஆரம்பித்தது. இதைக் கண்ட விவசாயி அயலில் உள்ளவர்களை அழைத்து ஈசனின் அற்புததோன்றலைக் காட்டி மகிழ்ந்தான் அன்று இரவு ஈசன் அவ்விவசாயியின் கனவில்தோன்றி எனக்கு சிறு கொட்டில்போட்டு

# நாட்டிலும் நகரிலும்

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலிருந்து என் இருப்பிடத்துக்கு பஸ் ஏறினேன். சலார் இருபத்தைந்துசதம், பஸ்ஸில் நிறையச் சனம். ஒரு ரூபாய்க் குத்தியைக் கொண்டக்டரிடம் நீட்டினேன். சில்லறை பின்பு தருவதாகக் கூறிப் போய் விட்டார், இறங்கவேண்டிய இடத்தில் நான் வீட்டுக்குப் போகும் அவசரத்தில் மிச்சக்காசைக் கேட்காமல் போய்விட்டேன். கொண்டக்டரும் மறந்து விட்டாரோ...... அல்லது?

வீட்டுக்குப்போய் சில்லறை வாங்கவில்லையே என்று நினைத்துக்கொண்டு திரும்பவும் அந்தபஸ் வரும் வரை ஸ்டாண்டில் காத்து நின்றேன். கொண்டக்டர் எனக்கு கொஞ்சம் அறிமுகமானவராகையால் சில்லறையைத் தந்துவிடுவார் என்று நம்பிக்கை. எனது கஷ்டகாலம் அவர் அந்த பஸ்ஸில் திரும்பி வரவில்லை. அவருக்கு அன்று வேலை முடிந்து விட்டதாக அறிந்தேன்.

பிற்பாடு நான் இதைப் பற்றி சிந்திக்கவில்லை. சரியாகப் பத்துநாட்கள் கழித்து அந்தக்கொண்டக்டரை மறுபடியும் பஸ்ஸில் சந்தித்தபோது இதைப்பற்றி மெதுவாக விசாரித்தேன். அவர் உடனே 'ஓம். இருக்கலாம்' என்று கூறிவிட்டு சில்லறையை எண்ணிக் கொடுத்தார்.

எழுபத்தைந்து சதம் பெரிய காசல்லவென்றும், கொண்டக்டர் அறிமுகமானவராகையால்தான் கொடுத்துவிட்டார் என்றும் சிலர் நினைக்கலாம். ஏற்கனவே சில்லறை கொடுத்துவிட்டேன் என்று அவர் ஒரேயடியாகக் கூறிவிட்டால் நான் மூச்சுக்காட்ட முடியாதல்லவா? பணத்தின்தொகை பற்றி அக்கறையில்லை. எவ்வளவு சிறிய தொகையாயினும் அதைப் பத்துநாட்களுக்குப் பின்பும் திருப்பிக் கொடுத்தவரின் கண்ணியம் தான் பெரிது. கொண்டக்டர் அந்த சம்பவத்தை உண்மையாகவே மறந்துவிடடு நான் கேடடுவிடடேன் என்பதற்காக என் பேச்சில் நம்பிக்கை வைத்து சில்லறையைத் திருப்பிக்கொடுத்திருக்கலாமல்லவா?

இன்னொரு நாள் ஒருபெரியவர் கொண்டக்டருக்கு காசைக் கொடுத்துவிட்டு பேர்ஸை தமது நேஷனல் ஷேர்ட் பொக்கட்டில் வைக்கும்போது அது தவறி விழுந்துவிட்டது. பெரியவர் அதைக் கவனிக்கவில்லை. கொண்டக்டர் மறுதடவை அந்தப் பக்கம் வந்தபோது விழுந்து கிடந்த பேர்ஸை எடுத்துக்கொண்டு, 'இது யாருடைய பேர்ஸோ தெரியாது, உரியவர்கள் அடையாளம் சொல்லிப் பெற்றுக் கொள்ளலாம்' என்று பிரகடனம் செய்தார். எல்லோரும் தங்கள் பொக்கட்டுகளைத் தடவினார்கள், அந்தப் பெரியவரும் தமது பொக்கட்டைத் தடவிப் பார்த்துவிட்டு, 'ஐயா, அது என்னுடையது. அதற்குள் ஒரு ஐந்து ரூபா நோட்டும் இரண்டு இரண்டு ரூபாய் நோட்டுகளும் சில்லறையாக அறுபத்தைந்து சதமும் ஒரு ஸ்வீப் டிக்கட்டும் இருக்கின்றன' என்று கூறினார், கொண்டக்டர் அதைச் சரிபிழைபார்த்துவிட்டு வேறொருவரும் கோராதபடியால் பேர்ஸை அந்தப் பெரியவரிடம் கொடுத்துவிட்டார், நன்றியறிதலுள்ள அந்தப் பெரியவர் கொண்டக்டரின் பெயர், நம்பர், பஸ் சாரதியின் பெயர், பஸ் நம்பர் எல்லாவற்றையும் குறித்துக் கொண்டு இ போ ச மேலதிகாரிகளுக்கு எழுதப்போவதாகச் சொன்னார்.

இவ்விரு சம்பவங்களும் புதிய அரசாங்கம் ஏற்பட்ட பின்பு நிகழ்ந்தன. பஸ் சேவை இனிமேல் வெகுவாக சீரடையும் என்பதற்கு இவை அறிகுறியோ?

பஸ்ஸில் பிரயாணம் செய்பவர்கள் 'கந்தோருக்கு நேரமாகிவிட்டதோ, வீட்டிலே என்ன பாடோ, வாங்கின சாமான்கள் எல்லாம் சரியாயிருக்கிறதோ என்ற அங்கலாய்ப்பில் பஸ்ஸைவிட்டு இறங்கிப் போகும் போது சில்லறையை மறந்துவிடுவது இயற்கை. கொண்டக்டர் கண்ணியமானவர் என்றால் தாமே வலியக் கொண்டுவந்து கொடுப்பர், ஆனால் எல்லோரும் நேர்மையானவர்களாய் இருக்கமுடியுமா?

பஸ் பிரயாணிகள் பஸ்ஸுக்கு வேண்டிய கட்டணத்தை முன்கூட்டியே சில்லறையாக்கிக்கொண்டு போய்விட்டால் ஒரு கரைச்சலும் இராது. அநாவசியமாக கொண்டக்டர்மாரில் பழிசுமத்த வேண்டியும் வராது

— வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

திகதிக்குப்பின் 55 வயதா கின்றவர் எவரும் அந்தத் திகதியில் இளைப்பாறுவார். 55 வயதாகி இதுவரை சேவை நீடிக்கப்பட்டோர் அனைவரும் அதாவது 55 வயதுக்கு மேலானோர். சேவை நீடிப்பு முடிவடையும் திகதி முதல் இளைப்பாறுசவர் அரசாங்கத்தின் இந்த இளைப்பாற்றுத்திட்டம் நிர்வாக ரீதியில் சுலபமாக இருக்கும்: நிர்வாகம் சம்பந்தப்பட்டவரை அது பொருத்தம். அதிகாரிகளைப் பேட்டி கண்ட ஆசிரியர் சங்கத்தூதுக் குழுவின் கோரிக்கை இளைப்பாறும் ஆசிரியரின் பென்ஷனைப் பொறுத்தவரையிலும் இளைப்பாறும் திட்டம் பற்றி அதிகாரிகள் தெரிவித்த விளக்கம் நிர்வாகம் சம்பந்தமாகவும் பொருத்தமே. ஆனால் பென்ஷனையும் நிர்வாகத்தையும்விட மிகமுக்கியமான பிள்ளைகளின் கல்வி சம்பந்தமாக யாரும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

இந்த இளைப்பாற்றுத் திட்டத்தை மூன்று வகையாகப் பிரிக்கலாம். *(1) 1970*-ம் ஆண்டு ஜூலை முதல் திகதிக்கும் டிசம்பர் *31* ந் திகதிக்குமிடையில் ஓய்வு பெறுபவர்கள். *(2) 1971*-ம் ஆண்டில் ஓய்வு பெறுபவர்கள் *1971*-ம் ஆண்டு ஜனவரி முதல் திகதியிலிருந்து டிசம்பர் 31ந் திகதிக்கிடையில் ஓய்வும் பெறுபவர்கள்.

ஓர் ஆசிரியர் ஏப்ரல் மாதத்துடன் 55 வயதைத்தாண்டு

...தியில் அவர்களின்இடத்தை நிரப்பும் புதிய ஆசிரியர்கள் அந்தப் பாடசாலைகளில்தமது கடமையை ஏற்கக்கூடியதாக அமைச்சு திட்டம் தயாரிக்க வேண்டும். இதற்கு ஏற்ற வகையில் இப்பொழுதே இளைப்பாறும்வயதை அடைந்துள்ள, வயதை நெருங்குகின்ற ஆசிரியர்கள் எந்தெந்தப்பாடசாலைகளைப் சேர்ந்தவர்கள்என்பது பற்றியகணக்கெடுப்பை அமைச்சு அதிகாரிகள் நடத்தி இளைப்பாறும் ஆசிரியர்களின் இடத்துக்கு உடனடியாகவேபுதியவர்களை நியமிப்பதற்கு முன்னேற்பாடான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதவசியம்.

எதிர்காலத் தலைவர்களான இன்றைய பிள்ளைகளின் கல்வியில் ஆசிரியர்கள், கல்வி அமைச்சு அதிகாரிகள் மட்டுமல்ல பெற்றோருக்கும் பெரும் பொறுப்பும் பங்குமுண்டு எனவே55வயது இளைப்பாற்றுத் திட்டத்தின் கீழ் இளைப்பாறும் ஆசிரியர்கள் வருட இடைக்காலத்தில் சேவையினின்று நீங்காமல் பார்த்துக்கொள்ளவும் இடைநடுவிலாயினும் வருடஇறுதியிலாயினும் இளைப்பாறும் ஆசிரியர்களுக்குப் பதிலாக புதிய ஆசிரியர்களை நியமிபபதில் தாமதமேற்படாமல் கவனித்துச் செயலாற்றவேண்டிய பொறுப்பும் கடமையும் ஆசிரியர்சங்கங்கள், கல்லூரி அதிபர்கள் சங்கங்கள், பெற்றோர்ஆசிரியர் சங்கங்கள்ஆகியவற்றுக்கும் உண்டு.

களை சிங்கள மொழியில் பெயர்ப்பதற்கும் ஒரு கமிஷன் நிறுவப்படவேண்டும்.

■ ஆங்கிலத்திலிருந்து சிங்களத்தில் மாற்றுவதில் ஏற்படும் பாதிப்புகளைக் கவனித்து வேண்டிய நடவடிக்கைகள்எடுப்பதற்கு சிபார்சு செய்து அறிக்கைகள் தயாரித்தளிக்க ஒரு கமிஷன் நியமிக்கப்பட வேண்டும்.

சட்டசபையில் மேற்படி தீர்மானம்1944ல் கொண்டு வரப்பட்டபோது அதற்கு ஒருதிருத்தமும் கொண்டு வரப்பட்டது. இத்திருத்தம் பின்வருமாறு:-

■ நாட்டின் சகல பாடசாலைகளிலும் சிங்களமும் தமிழும் போதனுமொழிகளாகவேண்டும்.

■ அரசாங்க பரீட்சைகள் யாவற்றிலும் சிங்களமும் தமிழும் பிரதான பாடங்களாக விருக்கவேண்டும்.

■ சட்டசபையின்அலுவல்கள்யாவும் சிங்களத்திலும் தமிழிலும் நடைபெறுவதற்குச் சட்டம் இயற்றபபட வேண்டும்.

■ சபைஅலுவல்களை சிங்களம் தமிழ் ஆகிய இருமொழிகளிலும் மொழிபெயர்க்கவும்வேற்றுமொழிகளிலுள்ள நூல்களைத் தமிழ் சிங்களம் ஆகிய மொழிகளில் மொழி பெயர்க்கவும் கமிஷன் ஒன்று நிறுவப்பட வேண்டும்.

■ ஆங்கிலத்திலிருந்து சிங்களத்திலும், தமிழிலும்

...த இருமொழிகளும் அரசகரும மொழியாவதில் எனக்கு ஒருவித ஆட்சேபமுமில்லை. இதனால் எதுவித மானகஷ்டமோ, நஷ்டமோ ...த்தோ ஏற்படுமென நான் நினைக்கவில்லை.

*1944*-ம் ஆண்டில் சட்டசபையில் உள்ளூராட்சி அமைச்சராகவிருந்த திரு. எஸ். டபிள்யு: ஆர். டயஸ் பண்டாரநாயக்காவினது கருத்து இதுவேயாகும்.

*1947*-ம்ஆண்டு புதிய அரசியல் திட்டமான சோல்பரி அரசியல் திட்டத்தை இந்நாட்டு சிறுபான்மை மக்களான தமிழர்கள் ஏற்று வாக்களித்தார்கள். சட்டசபையின் வாக்குறுதிகள் யாவற்றையும் இப்புதிய அரசியல் திட்டம் செயல்படுத்துமென அளிக்கப்பட்டஉறுதியைக்கொண்டே அவர்கள் வாக்களித்தனர். அதாவது சிங்களம் தமிழ் ஆகிய இருமொழிகளும் சட்டசபையில் தீர்மானித்தபடி அரசகரும மொழியாக்கப்படும் என்ற நம்பிக்கையின் பேரிலேயே அவர்கள் புதிய அரசியல் திட்டத்தை ஆதரித்தனர். இதைநான் மதிப்புக்குரிய தபால் தந்தித் தொடர்பு அமைச்சருக்கும், மதிப்புக்குரிய நீதியமைச்சருக்கும், எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

இவ்வாறு வாக்களித்ததற்காக நான் அடிக்கடி திரு. பொன்னம்பலத்தைக் குற்றம்சாட்டியுள்ளேன். ஆனால் தற்போது இப்புதிய சூழ்நிலையில் பிரிட்டிஷாரானாலும்சரி அல்லது வேறுயாரானாலும்சரி எமது அன்னிய தலைவர்களின் அரசியல்திட்டங்களை ஏற்காது ஒதுக்கிவிடலாம். அந்தஅளவுக்கு இன்று அரசு பலம் வாய்ந்ததாகவுள்ளது. சிங்கள மக்கள் இந்தநாட்டுக்கு ஒரு அரசியல் திட்டத்தை வகுக்க வேண்டிய காலம் இன்று ஏற்பட்டுள்ளது. இந்த விஷயத்தின் அந்த அம்சத்தைப் பற்றிப்பின்னர் நான் கூறுகிறேன்- இதை ஏன் நான் கூறுகிறேனெனில் திரு. பொன்னம்பலம் சோல்பரி கமிஷனை அன்று ஆதரித்து 8 மணித்தியாலங்கள் உரை நிகழ்த்தி ஒரேயொரு கோரிக்கையைமட்டும்கோரினார் என்பதைக்காட்டுவதற்காகவேயாகும். ஒரு சிறுபான்மைச் சமுதாயம் பெரும்பான்மைச் சமுதாயத்தோடு சமஅந்தஸ்து உடையதாகவிருக்க விரும்புகையில் அவர் 50க்கு 50 என்றதை மட்டும் கோரினார். இந்தக்கோரிக்கையை

...தான்தோன்றி ...பரன் என்றால் தனிப்பெரும் பிரேமை. எந்தமதத்தைச் சார்ந்தவர்களும் இங்கு வந்து வழிபாடுசெய்கின்றனர். அழகிய வேலைப்பாடுகளும் மணிக்கோபுரத்தின் மாண்புறு தோற்றமும் கொண்ட இவ்வாலயத்தின் மூலஸ்தானத்திலே கன்னம்கரேல் என்று ஜெலித்துக் கொண்டிருக்கும் சுயம்பு லிங்க மூர்த்தி பார்ப்போர் உள்ளங்களை மெய்மறக்கச் செய்துவிடும். ஈசனின் சக்தியாக விளங்கும்பூலோக நாயகி அம்மையாரின் அருளும் அளப்பரியது. ஸ்தல விசேஷம், மூர்த்தி விசேஷம் தீர்த்தவிசேஷம் கொண்ட இவ்வாலயத்தைப்பற்றிய கர்ணபரம்பரைக்கதைகள் பல உண்டு. மிகப் பழமைவாய்ந்த ஆலயத்தில் குடிகொண்டுள்ள இம்மூர்த்தியை வேகாவனப்பெருமாள் என்றும் அழைப்பார்.

இவ்வாலயம் அமைந்து இருக்கும் இடத்தில் அக்காலத்தில் ஒரு விவசாயியால் குரக்கன் விதைக்கப்பட்டு அறுவடை செய்யும்போது குறிப்பிட்ட ஓர் இடத்தில் மீண்டும் மீண்டும் அது தழைத்தபடியே இருந்தது. இதைக்கண்ட அவன் அந்த

...உள்ளவர்களை அழைத்து ஈசனின் அற்புததோன்றலைக் காட்டி மகிழ்ந்தான் அன்று இரவு ஈசன் அவ்விவசாயியின் கனவில்தோன்றி எனக்கு சிறு கொட்டில்போட்டு காரணப் பெயரையே வைத்து பூசைசெய்யும்படி கூறிமறைந்தார். மறுநாள் அவ்விவசாயி பொதுமக்களைக் கூட்டி நடந்தவைகளை கூறி கொட்டிலும் போட்டு ஒட்டுக்கு தீவைத்து சுடப்பட்டமையால் ஒட்டு சுட்டான் என்றும் ஈசன் தீயினால் வேகப்படாமையால் வேகாலனப் பெருமான் என்றும் காரணப் பெயரும் சூட்டப்பட்டு தினமும் பூசை நடைபெற்றதெனக் கூறுவர். காலப்போக்கில் இக்கிராமத்தின் பெயரும் ஒட்டுசுட்டான் எனவழங்கலாயிற்று.

தான்தோன்றி ஈஸ்வரன் ஆலயவருடாந்த உறசவம் நேற்று முன்தினம் ஆரம்பமாயிற்று தொடர்ந்து 16 தினங்கள் திருவிழா நடைபெறும் இதில் வேட்டைத்திருவிழா மிகமுக்கியம் வாய்ந்த தாகும்.

இரா. பத்மநாதன்,
ஒட்டுசுட்டான்.

...க்கலாமல்லவா?

இன்னொரு நாள் ஒருபெரியவர் கொண்டக்டருக்கு காசைக் கொடுத்துவிட்டு பேர்ஸை தமது நேஷனல் ஷேர்ட் பொக்கட்டில் வைக்...

போய்விட்டால் ஒரு கரைச்சலும் இராது, அநாவசியமாக கொண்டக்டர்மாரில் பழி சுமத்த வேண்டியும் வராது

—வழிப்போக்கன்

## சுருட்டுக் கைத்தொழிலை பாதுகாக்க வேண்டும்

### மாநகரசபையில் பிரேரணை

யாழ்ப்பாணம், ஞாயிறு

சுருட்டுக் கைத்தொழிலைப் பாதுகாப்பதுடன், தொழிலாளர்பிரச்னைகளையும் தீர்க்கக்கூடியவகையில் சுருட்டுத் தொழில் பாதுகாப்பு நடவடிக்கையை, உடனடியாக எடுக்க வேண்டுமென்றுகைத்தொழில் மந்திரியையும் தொழில்மந்திரியையும்கேட்டுக் கொள்ளும் பிரேரணையொன்றை யாழ்ப்பாணம் உதவி மேயர் திரு. ஏ துரைராஜசிங்கம், அடுத்த மாநகரசபை கூட்டத்தில் கொண்டுவர முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறார்.

அப்பிரேரணையில் கூறப்பட்டிருப்பதாவது:-

'யாழ்ப்பாணத்திலுள்ள பெருந்தொகையான மக்களுக்கு. ஜீவாதாரமாக உள்ளது சுருட்டுக் கைத்தொழில். இத்தொழில் தனிப்பட்டவர்களின் ஏகபோக உரிமையினால்தன்நயம் கருதி பணம் சம்பாதிக்கும் ஒரே நோக்கத்தை அடிப்படையாகவைதது தரம் கெட்ட புகையிலைகளையும் உபயோகித்து சுருட்டுப்புகைப்பவர்கள் வெறுத்துத் தள்ளக் கூடிய வகையில் சுருட்டுத் தயாரிப்பவர்கள் செய்து வருகிறார்கள்.

இதன் காரணமாக பல்லாயிரக்கணக்கான மக்கள் நஷ்டமடைய நேரிடுகிறது. முககியமாக சுருட்டுத் தொழிலாளர்களில் இத்தொழிலையே நம்பியிருக்கும் தொழிலாளர்கள் ஒருமாதத்தில் பத்து பதினைந்து நாட்கள் தானும் வேலைசெய்யக் கூடியதாக முதலாளிகள் வேலைகொடுப்பதில்லை.

சம்பள நிர்ணயசபை தீர்மானத்தைப் பூரணமாக அமுல்நடத்துவதில்லை. பெரும்பான்மையாக தொழில் செய்யுமிடங்கள் சுகாதார வசதிகள் இல்லை. சேமலாப நிதிபோன்ற உரிமைகள்தட்டிக்கழிக்கப்படுகின்றன.

திரு. என். அந்தோனிப்பிள்ளை கீழ்க்காணும் பிரேரணையை கொண்டுவர முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறார், ''யாழ்ப்பாணத்தில் மிகவும் பிரதானமான தொழிலாக விளங்குவது சுருட்டுத் தொழில் தானெனவும், அத்தொழில் மிகவும் வீழ்ச்சி அடைந்து வருகிறதெனவும் இத்தொழில் வீழ்ச்சி அடைந்த காரணங்களை ஆராய்ந்து உடன் நடவடிக்கை எடுக்க எந்த வித கட்சிப் பாகுபாடற்ற முறையில் ஒரு விசாரணைச் சபை நியமித்து பல கட்சிகளுடையவும் ஆலோசனைகளைக் கேட்டு ஆவனசெய்ய வேண்டுமென இச்சபை பிரதம மந்திரியை கேட்டுக் கொள்ளுகிறது.''

— —

### பொதுநிர்வாகத்தை சீர்திருத்த ...ரு குழுக்கள்

கோட்டை, சனி

சிம்மாசனப் பிரசங்கத்தில் கூறப்பட்டபடி பொது மக்களுடன் நிர்வாகத்திற்கு நெருங்கிய தொடர்பு ஏற்படுத்த இருகுழுக்களை பொதுத்துறை நிர்வாக அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா நியமித்துள்ளார்.

இக்குழுக்கள், கொழும்பு நிர்வாகத்தை சிறப்பாக்குவதற்குரிய வழிவகைகளையும், மாவட்ட நிர்வாகங்களை மேலும் சீர்திருத்தவும் வேண்டிய வழிவகைகளை ஆராயும்.


### விற்பனைக்கு

சங்கானை மாலியவத்தை பிராம்பத்தை ருேட்டில் தென்னம்பிள்ளைக்காணி 10 பரப்பும், வயல்காணி 12 பரப்பும் பனங்காணி 10 பரப்பும் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: V. செல்லத்துரை, மாலியவத்தை, சங்கானை. 3153


### நல்லூரில்

## யாழ். திவ்ய ஜீவனசங்க ஆச்சிரம மண்டபம்

### 8-ம்திகதி சாந்தி வைபவம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

திவ்யஜீவன சங்க யாழ்ப்பாணக்கிளையின் ஆச்சிரம மண்டபம் இம்மாதம் 8-ம் திகதி காலை நடைபெறவிருக்கிறது அன்று தட்சணாமூர்த்தி அபிஷேகமும் மகேஸ்வர பூசையும் இடம்பெறும்

ஆச்சிரமக் கட்டிடம் சுமார் ஒன்றரை லட்சம் ரூபா செலவில் நல்லூரில் அமைக்கப்பட்டு, வேலைகள் முடியும் தறுவாயிலுள்ளன. பழைய தமிழ் ராஜதானிக்கு அண்மையாக சட்டநாதர் கோவிலுக்குத் தெற்கே இவ்வாச்சிரம் அமைந்துள்ளது. பிரார்த்தனை மண்டபம், நூல் நிலையம், பெரியார்கள் தங்குவதற்கான அறைகள் முதலியன இதில் இடம் பெற்றுள்ளன. 61-ம் ஆண்டு தொடக்கப்பட்ட இக்கட்டிட வேலைகள் இவ்வருட இறுதிக்குள் முடிவடைந்து திறப்புவிழாவும நடைபெறுமென நம்பப்படுகிறது.

ஆச்சிரமத் திறப்பு விழாவும் அகில இலங்கை திவ்ய வாழ்க்கை மகாநாடு இங்கு நடக்கும் போது இந்தியா, மலேஷியா, அமெரிக்கா மற்றும் இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள திவ்ய ஜீவன சங்கத்தைச் சேர்ந்த துறவிகளும் அறிஞர்களும் தொண்டர்களும் விழாவில் கலந்து கொள்வர்.

மனித வாழ்வைத் தெய்வீகமாக்குவதையும் உலகில் ஒற்றுமையையும் நிலைநாட்டுவதையும் நோக்கமாகக் கொண்டு 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்; அன்பே இன்பம் அறமே சாந்தி' என்ற தத்துவத்தின் அடிப்படையில் திவ்யஜீவன சங்கம் இயங்கி வருகிறது.

### கும்பாபிஷேகம்

இன்று திருவானைக்காவில் கோவில் கும்பாபிஷேகம் திருநீற்றான் மதில், 11 கோபுரங்கள், இரண்டு தீர்த்தங்கள் முதலிய திருப்பணிகள் புதிதாக நடந்துள்ளன. ஸ்ரீ அகிலாண்டேஸ்வரிக்கு, உச்சிகாலத்தில் குருக்கள்புடவை அணிந்தே பூசைசெய்வதும், திருவிழாவிலே ஒரு நாள் அம்மன் சுவாமி போலும் சுவாமி அம்மன் போலும் உடை தரிப்பதும் குறிப்பிடத் தக்கது. இக் கும்பாபிஷேகம் ஒன்றரை லட்ச ரூபாய் செலவில் நடக்கிறதாம். காஞ்சி காமகோடி புதுப்பெரியவாள் ஸ்ரீ ஜயேந்திர சுவாமிகள் ஆனைக்காவில் அருள்வெள்ளம் பெருக்கெடுத்துள்ளதாகவும், ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத ஸ்ரீ நம்பு சேலாரின் அருளை எல்லாரும் பெற்று உய்ய வேண்டுமென்றும் கூறினார்கள். ஒரு சித்தர் திருநீற்றையே கூலியாகக் கொடுத்து பெரிய சுற்று மதிலைக் கட்டியதாகவும், அதனால் தான் அதற்கு திருநீற்றான் மதில் என்று பெயர் வந்ததாகவும் தெரிகிறது.

## 'மக்களை தவறான வழியில் கொண்டு செல்லாதீர்'

புத்தூர், ஞாயிறு

சமஷ்டிக் கோரிக்கை தமிழ் மக்களை, சிங்கள மக்களிடமிருந்து பிரித்து, அவர்களை உரிமைபெற முடியாத நிலைக்கு கொண்டுவந்துள்ளதென்பதை தமிழ் மக்கள் இன்று உணர்ந்து விட்டார்கள். அதனால்தான், தமிழ் மக்கள் அரசாங்கத்திற்கு ஆதரவளித்து வருகின்றார்கள்.

கைதடியில், சுதந்திரக் கட்சிக் கிளையை அங்குரார்ப்பணம்செய்து வைத்து யாழ் மாவட்ட சுதந்திரக்கட்சி தலைவர் திரு எம். நடராசா பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

திரு நடராசா மேலும் கூறியதாவது: தமிழ் மக்களை தவறான வழியில் கொண்டு செல்ல வேண்டாமென தமிழரசு தலைவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். 58ம் ஆண்டு இனக்கலவரத்தை ஏற்படுத்த காரணமாக விருந்தவர்களுடன், தமிழரசுக் கட்சியினர் சேர்ந்து தேசிய அரசாங்கம் அமைத்தனர். ஆனால் தமிழர்களுக்கு எந்த வித உரிமையையும் பெற்றுக் கொடுக்கவில்லை.

கிழ்க்காணுவோர், கிளை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர் திரு மா தா பாஸ்கரன், உபதலைவர்கள் திருவாளர்கள் சி கந்தையா, இ கணேசன், மு நடராசா, காரியதரிசி: திரு ச திரிலோகசிங்கம், உப காரியதரிசிகள்: திருவாளர்கள் வே மார்க்கண்டு, ஆ சின்னப்பா, செ. நித்தியாநந்தா, தனதிகாரி: திரு ச சபாரத்தினம். 10 பேர் கமிட்டி உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

— —

### சுகாதார அமைச்சருக்கு அவசரத் தந்தி

மூதூர், சனி

திருகோணமலை வைத்தியசாலையிலிருந்து மாற்றலாகிச்சென்றவர்களின் இடங்களுக்கு உடனடியாகப் புதியவர்களை நியமிக்குமாறு கோரி திருக்கோணமலை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. பி. நேமிநாதன் சுகாதார அமைச்சர் திரு. டபிள்யூ. பி. ஆரியதாசாவுக்கு அவசரத்தந்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

வைத்தியசாலை அதிகாரி உட்பட தாதியர் மற்றுமுள்ள உத்தியோகஸ்தர்கள் இடமாற்றம் பெற்றுள்ளபொழுது அவ்விடங்களுக்கு வேறு உத்தியோகஸ்தர்களை அமர்த்தாததினால் நோயாளர்களுக்கு வசதிக்குறைவு ஏற்பட்டுள்ளது எனவும் அத்தந்தியில் மேலும் அவர் குறிப்பிட்டார்.

### சுயபாஷை ....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பேசவிருக்கின்றனர்

பல்கலைக்கழகங்களில் வைத்தியம், பொறியியல், சட்டத்துறைகளில் சுயபாஷையில் போதனை அளிப்பதற்குத் தயாராகுமாறு கல்வி அமைச்சர் தெரிவித்திருந்ததைத் தொடர்ந்து விரிவுரையாளர்கள் அமைச்சரைக் கண்டுபேசவிருக்கின்றனர்.

இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலே வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970- ம் ஆண்டு ஜூலை மாதம் 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org